# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. III     Issue 1     April 2013**

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்


இம்மாதச் செய்தி ........ 2

லைப் டிவைன் ........ 3

சாவித்ரி ........ 15

யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 17

அஜெண்டா ........ 22

பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 24

அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ........ 29

அன்னை வழியில் சாதனை ........ 34

பெண்ணின் பெருமை ........ 55

ஸ்ரீ அரவிந்தரும் மரபும் ........ 63


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**நேரம் போவதே
தெரியவில்லை என
சமர்ப்பணம் பலிக்க
வேண்டும்.**

**சமர்ப்பணம்
ஒரு நாளை
ஒரு நிமிஷமாக்கும்.**

**சமர்ப்பணம்
காலத்தைக் கடக்கும்.**

## இம்மாதச் செய்தி

**சமர்ப்பணம்**

**சமர்ப்பணத்தால் மட்டுமே**

**பூர்த்தியாகும்.**





# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXIV. Matter

Life is not an impossible evil as the tradition believes. Nor is it an inexplicable dream. Our analysis gives a rational assurance to this effect. Others believe it is a deplorable fact. In truth, we now know it is a mighty vibration. It is of the divine All-Existence. Now we see something of its foundation and principle. It has a high potentiality which makes us look up towards it. It has the divine out-flowering ultimately. There is one principle below Mind and Life. We have not yet sufficiently considered it. It is the principle of Matter. Life stands upon it as upon a pedestal. Out of that it evolves like the form of a many branching tree. The tree emerges out of its encasing seed. And life evolves out of Matter. The mind, life and body of man depend upon this physical principle. The out-flowering of Life is the result of Consciousness emerging into Mind. It expands, elevates itself in search of its own truth. It does so in the largeness of the supramental existence. Yet, it seems also conditional. It is conditioned by this case of body. And it is the foundation of Matter. The

importance is obvious. It is because he has developed a body. Or he has been given a body and brain. They are capable of receiving and serving a progressive mental illumination. It is an illumination of man who has risen above the animal. Equally, it can only be by developing a body that he will rise above himself and realise a divine manhood. It must at least be a functioning of the physical instrument that he develops. He rises not merely in thought and in his internal being, but in life. He rises perfectly to a divine manhood. Otherwise either the promise of Life is cancelled or man is not the divine instrument. By cancelling Life, its meaning is annulled. And earthly being can only realise Sachchidananda. It must be by abolishing itself. It means shedding from it mind, life and body. Thus it returns to the pure Infinite. It means there is a destined limit to his consciously progressive power. This power distinguishes him from all other terrestrial existences. It is he who has replaced them in the front of things. Now another must replace him and assume his heritage.

Body is the greatest difficulty. It was felt so from the beginning. It is a stumbling block. It is a rock, rock of offence. Therefore the seekers hurled their ban on the body. The intensity of spiritual fulfillment raises the eagerness. The greater the eagerness, the greater is the ban. The seeker has a world disgust. His disgust selects a world principle. It ended in the loathing of the body. The body has become an object of special loathing. The body is an obscure burden. Man cannot bear it. The body is materially gross. It is obstinate. The seeker's life is a life of the ascetic. He sought deliverance from it. It became an obsession in him. He was eager to get rid of it. Therefore he denied its existence. He refused to accept



the reality of the material universe. Religions curse Matter. Most of them do so. To them religious truth is important. Spirituality is important. They temporarily endure the body. So refusal of the body became the test of spirituality. The older creeds were more patient. They were profound. We live in the Iron Age. It is feverish in its impatience. It is the impatience of the soul. Its fever was a torture. The Iron Age is a burden. The later creeds made this formidable division. It was a division of the soul from the body. The older creeds did not so divide Life. To them, Earth was the Mother. Heaven was the Father. They accorded both equal love and reverence. They were the ancient mysteries. To us they are obscure. It is unfathomable to our gaze. It is so with the materialist as well as the spiritual seeker. They are content to cut the Gordian knot. The problem of existence is the knot. It is cut with one blow. That leads to an escape into an eternal bliss. Or it ends in annihilation or an eternal quietude.

Our awakening to our spiritual possibilities reveals this quarrel. But this is not the true beginning. It begins with the appearance of life itself. Life struggles to establish its activities and form against the forces of inertia and forces of inconscience. Also it is against atomic disaggregation. They are the knot in the material principle. The knot is the great Denial. Life struggles against all these. Life is constantly at war with Matter. The battle always ends in the defeat of Life. The defeat is not real but only apparent. Life collapses downward to the material principle, death. Mind appears. The discord deepens. Mind has its own quarrel. It does so with Life and Matter. Life and Matter are limited. Mind constantly battles against those limitations. It is in constant subjection to their grossness. Mind

revolts against it. The revolt is against the inertia of Matter. Also it is against the passions of Life. Passions accompany sufferings. The battle turns. It is a partial, costly victory to Mind. Mind conquers and represses. It even slays the vital cravings. Mind imparts the physical force. It distorts the balance of the body. The interests of the greater mental activity require it. A higher moral being needs them. This struggle generates the impatience of life. It creates the disgust of the body. There is a recoil from both. They rise towards a mental and moral existence. Man awakens to an existence greater than Mind. This principle of discord, then, is carried further. Mind, body, and life are condemned. They are the trinity of the world, the flesh and the devil. Mind too is banned as the source of all our malady. War is declared on the spirit and its instruments. The victory of the spiritual Inhabitant is sought for. It is an evasion from its narrow residence. It results in the rejection of mind, life and body. Finally, the spirit withdraws into the infinitude. The world is a discord. The solution is sought in increasing the discord. It is carried to its extreme possibility. It is a cutting away and a final severance.

There are defects and victories. They are only apparent. This is not a solution. It is an escape from the problem. Life is not really defeated by Matter. It makes a compromise. It uses death to continue life. Mind is not victorious over Life and Matter. But it has only achieved an imperfect development. It is of some of its potentialities at the cost of others. They are bound up with other possibilities. They are unrealized or rejected possibilities. They are the possibilities of its better use of life and body. There is the lower triplicity. The individual soul has not conquered it. It has only rejected its claims upon it.



The spirit cast itself into form of universe. Then the spirit has undertaken some duties. The soul has rejected them. The labour of the Divine in the universe continues. It is so because the problem continues. But there is no satisfying solution of the problem. There is no victorious accomplishment of its labour. We have a standpoint. It is that Sachchidananda is the beginning, middle and end. Therefore our struggle and discord cannot be eternal. It is not the fundamental principle in His being. Their very existence implies something. It is a labour towards a perfect solution. It is a complete victory. Therefore we must seek a solution. It is in real victory of Life over Matter. It is through the perfect use of the body by Life. It is in a real victory of Mind over Life and Matter. It must be through a free and perfect use of life-force. It uses a form by Mind. It is a real victory of Spirit. It is a victory over the lower triplicity. It is through a perfect occupation of mind, life and body. It is the conscious Spirit that uses it. This is the view we have worked out by this last conquest. It can alone make the other really possible. We may see how these conquests can be possible. Or wholly possible. We must find out the reality of Matter. Earlier we found out the reality of Mind and soul and life. So we must again seek this fundamental knowledge of Matter.

Matter is unreal and non-existent. It is only in one sense. Our present knowledge is not the truth of Matter. Our idea and experience of Matter is not true. It is a phenomenon. Our senses have a relation with all-existence. We move in that relation. It does not have the truth of Matter. Science has a discovery. It sees Matter resolves into forms of energy. It is a universal and fundamental truth. Science has got a hold of it. Philosophy

has another truth. To it, Matter only exists as an appearance. It is an appearance to the consciousness. There is one reality. It is Spirit. It is the conscious Being. This too is a fundamental truth. This is a greater and completer truth. Science has got a hold of it. Still, there is a question to be answered. Why should Energy become Matter? It can become force-currents. Matter is Spirit. It can as well remain as Spirit. It can enjoy its velleities, joys. What is the necessity of admitting the appearance of Matter? This, they say, is the work of Mind. Or else, it is something else. Thought does not directly create. Thought does not even perceive material things. Therefore, they say, it is really the work of Sense. The sense-mind creates forms. It seems to perceive those forms. And thought-mind works on those forms. Sense mind presents those forms to the thought-mind. But, it is evident, the individual mind is not the creator. The phenomenon of Matter is not created by the individual Mind. Human mind is the result of earth-existence. We cannot make it the result of human Mind. We can, of course, say the world exists only in our minds. It is a non-fact. It confuses. The material world existed before Man came on earth. It will continue after Man's disappearance. Our individual mind may abolish itself in the Infinite. But Matter will remain. We must conclude that it is a universal Mind. It will be subconscious to us. It will be in the form of a universe. Or it will be superconscious in its Spirit. It is the spirit that has created that habitation. Of course, the creator must precede the creation. This implies a superconscient Mind. It creates by the instrumentality of a universal sense. It creates in itself the relation of form with form. It constitutes the rhythm of the material universe. Even this is no complete solution. It



tells us that Matter is a creation of Consciousness. Matter is the basis of cosmic workings. This solution does not tell us how Consciousness came to create Matter for this purpose.

We can go back at once to the original principle of things. That way we can understand better. Existence is in its activity a Conscious-Force. It presents the working of its force to its consciousness. They are the forms of its own being. The one sole-existing thing is Conscious-Being. Force is only its action. Its results are but forms of that Conscious-Being. Substance is Matter. Matter then is only a form of Spirit. This form of Spirit assumes an appearance to our senses. It is due to the dividing action of Mind. We were able to deduce from it the entire universe. We did so consistently. We thus understood the entire phenomenon of the universe. We know now Life is an action of conscious-Force. Material forms are its result. Life is involved in those forms. They appear in them first as inconscient force. It evolves and brings back into manifestation Mind. Mind comes as the consciousness of the real self of force. It never ceased to exist in it. It never ceased even when Unmanifest. The original conscious knowledge is Supermind. Mind is an inferior power. Life acts as an instrumental energy to Mind. It descends through Supermind. Consciousness is Chit. It represents itself as Mind. It separates from its own higher reality in Supermind. It gives Life the appearance of division. It involves further in its own Life-Force. Thus it becomes subconscious in Life. Thus it gives an outward appearance of inconscient force. It does so in its material workings. Therefore, the inconscience, the inertia, the atomic disaggregation of Matter have a source. It is in this all-dividing action of Mind. It is self-involving. By that our universe came

into being. Mind is only the final action of Supermind. It is so in the descent towards creation. So Life is an action of Conscious-Force. It works in the conditions of the ignorance. It is created by the descent of Mind. So, Matter is the final action by conscious-being. It is phenomenally divided within itself. It is by the action of a universal Mind. It is a division which the individual mind repeats. It dwells in it. But it does not abrogate. It does not at all diminish the unity of the Spirit. It is the unity of Energy. Or it is the real unity of Matter.

This is phenomenal division. It is pragmatic. The origin is an indivisible Existence. We do not know why. It is because of Mind. It has the principle of multiplicity. It has to carry it to its extreme potential. It can be done only by division and separativeness. For that, it has to precipitate itself into Life. There it has to create forms of the Multiple. Being is a universal principle. It must give it the appearance of substance. It is a gross material substance. It is not a pure subtle substance. It must give it the appearance of substance. The substance must offer itself to the contact of Mind. The contact must be of a stable thing. Or, it must be an object in an abiding multiplicity of objects. It cannot be the substance which offers itself to the contact of pure consciousness. It would be something of its own pure eternal existence. That pure existence is reality. Or, it must not be to the subtle sense a plastic form. It will freely express the conscious being. The contact of mind with its objects is sense. Here it has to be an obscure sense. It must also be an externalized sense. It contacts objects. It must be assured of the reality of those objects. Supermind lets the descent of Sachchidananda into mind and life. It is followed by the descent of pure substance. It descends into material



substance. The will has to make multiplicity of being. It has to create an awareness of things from separate centres of consciousness. It is a necessary result of the will. This is the first method of this lower experience of existence. We can go back to the spiritual basis of things. Here substance is in utter purity. It resolves into pure conscious being. It is self-existence. It is inherently self-aware by identity. But it has not yet turned its consciousness upon itself as an object. Supermind preserves this self-awareness. It does so by identity. It is identity as its substance of self-knowledge. It is its light of self-creation. For that, creation presents Being to itself. It does so as subject-object. It is one and multiple of its own active consciousness. Being as object is held there in a supreme knowledge. It can, by comprehension, see itself as object as well as subject. It is object of cognition within itself. It is subjectively seen as itself. It can also simultaneously project itself as an object by apprehension. It is an object of cognition within the circumference of its consciousness. It is not other than itself. It is a part of its being. But, it is a part put away from itself. That is to say, put away from the centre of vision. There Being concentrates itself as the knower, Witness or Purusha. Mind arises from this apprehending consciousness. We have seen this. It is a movement by which the individual knower sees. He regards a form of his own universal being as if other than himself. There is the divine Mind. There is immediately another movement. It is simultaneous. Or, it is the reverse side of the same movement. It is an act of union in being. It heals the phenomenal division. It prevents it from becoming real to the knower. It does not allow it even for a moment. It is not permitted to be solely real to the knower.

This is an act of conscious union. This is represented in the dividing Mind. It is represented obtusely, ignorantly, quite externally. It is represented as contact in consciousness. It is a contact between divided beings and separate objects. This contact in divided consciousness is sense with us. Rather it is primarily represented as sense. It is the principle of sense. Thought-mind prepares to return to a higher principle of union. In it division is made subject to unity and subordinate. Substance is material substance. It is the form in which Mind acts through sense contacts. It thus contacts the conscious Being. Mind is itself a movement of knowledge.

Mind has a nature. It tends to know and sense substance of conscious-being. It does not do it in its unity or totally. It senses by the principle of division. Mind sees it, as it were, in infinitesimal points.

In order to arrive at a totality it associates the points together. Cosmic Mind dwells in these viewpoints. They are associations. Mind is the agent of Real-Idea. It is creative by its inherent force. Its nature is to convert all its perceptions into energy of life. So does the All-Existence convert all His self-aspectings. They are converted into various energy of His creative Force of consciousness. Cosmic Mind turns these multiple viewpoints of universal existence into standpoints of universal Life. It turns them in Matter into forms of atomic being. They are instinct with the life that forms them. They are governed by mind, and will. They actuate the formation. The atomic existence thus formed must be the very law of their being. They tend to associate themselves to aggregate. Each of these aggregates bears with it a fiction of separated



individual existence. They are instinct with the hidden life that forms. The hidden mind and will actuate them. Each such individual object or existence is supported by its mechanical ego of force. In it the will to be is dumb. It is imprisoned. Nonetheless, it is powerful. By its self-aware mental ego it is liberated. It is conscious and separately active. It is, according as the mind in it, implicit or explicit, manifest or unmanifest.

This is the cause of atomic existence. It is not from any eternal original Matter. Nor is it from any eternal and original law of that Matter. But it is due to the nature of the action of cosmic Mind. Matter is a creation. For its creation, the infinitesimal was needed. It serves as a starting-point or a basis. The infinitesimal is an extreme fragmentation of the Infinite. Ether may and does exist. It is intangible. It is almost spiritual support of Matter. But it is a phenomenon. To our present knowledge, at least, it does not seem materially detectable. The formal atom is a visible aggregate. Subdivide it into essential atoms. Break it up. Let it become the most infinitesimal dust of being. We shall still arrive at some utmost atomic existence. It is because of the nature of Mind and Life. It is they who formed it. It is unstable. Perhaps always reconstituting itself. It does so phenomenally. It does so in the eternal flux of force. It is not at a mere unatomic extension. It is incapable of contents. Unatomic extension of substance is the reality of pure existence. It is an extension which is not an aggregation. It is a coexistence otherwise than by distribution in space. It is also the reality of pure substance. They are a knowledge of Supermind. It is a principle of its dynamism. It is not a creative concept of the dividing Mind. Mind can become aware of them behind its workings. They are the reality underlying

Matter. But it is not the phenomenon underlying Matter. Mind, Life, Matter itself can be one with that pure existence. It is a conscious extension in their static reality. But it does not operate by that oneness in their dynamic action. Nor in its self-perception and self-formation.

We have now arrived at the truth of Matter. There is a conceptive self-extension of being. It works itself out in the universe as substance. Or, it is object of consciousness. It is represented by cosmic Mind and Life. Their action is creative. There is atomic division and aggregation. The result is the thing we call Matter. But, this Matter is like Mind and Life. It is being. It is Brahman in its self-creative action. It is a form of the force of conscious Being. It is a form given by Mind. It is realised by Life. It holds within itself its own reality. Consciousness is that reality. It is concealed from itself. It is involved and absorbed in the result of its own self-formation. And therefore it is self-oblivious. It is brute and void of sense. It seems so to us. Its consciousness is hidden within it. It has a secret experience. It is delight of being. It offers itself to this secret consciousness. It offers as an object of sensation. This it does to tempt the hidden godhead. It is tempted out of its secrecy. Matter is Being manifest as substance. It is force of Being cast into form. It is a figured self-representation. It is a representation of the secret self-consciousness. It is delight offering itself to its own consciousness as an object. What is Matter if it is not Sachchidananda? Matter is Sachchidananda. He is represented to His own mental experience. It is as a formal basis of objective knowledge. It is action and delight of existence.

❋❋❋





## P.149 A thought was there that planned, a will that strove

### திட்டமிடும் எண்ணம், முயலும் உறுதி

- ☆ குறுகிய வட்டத்துள் சிறு இலட்சியங்கள்
- ☆ அளவு கடந்த அவதிப்பட்டு, அரை நிமிஷப் பலன் பெற
- ☆ தான் மண்ணில் பிறந்த மக்கியப் புழுவென அறியும்
- ☆ பெரிய சட்டமோ, பெரும் அரங்கமோ அது நாடவில்லை
- ☆ அகத்துள் பார்வை செல்லவில்லை, மேல் நோக்குமில்லை
- ☆ கடினமான தர்க்கத்தைப் பயிலும் மந்தமான மாணவன்
- ☆ தவறான உணர்வு தலையெடுத்து ஆள்கிறது
- ☆ தோற்றத்தைக் கடவுளின் திருமுகம் எனக்கொண்டு
- ☆ சிறு ஜோதியை பெருஞாயிறாகக் கொண்டு
- ☆ நீல ஆடையை நீல வானமாக நினைத்து
- ☆ பகுதிகளை முழுமையென நினைவால் கருதி
- ☆ வேகமாக உரையாடும் குரலொன்றெழுந்தது
- ☆ அர்த்தமற்ற செயல்களும், எண்ணங்களும் சந்தையாகக் கூடி
- ☆ ஜீவனற்ற வாழ்வு, உடலுக்கு உட்பட்ட மனம்
- ☆ இதுவே இயற்கையின் பளபளக்கும் கிரீடம்
- ☆ சிறு அகந்தை முழு உலகை அரங்கமாக ஏற்றது
- ☆ அரை நிமிஷ ஆசைகளும், குறுகிய காமமும் திருப்திப்பட

☆ மரணத்தில் முடியும் பாதையில் எழுந்து பூர்த்தியாகும் வாழ்வு
☆ சுவரில் முடியும் வீதியை சுவர்க்கத்தின் வாயிலாகக் கருதி
☆ அதற்காக ஆத்மா பிறவியை நாடியதாக
☆ சுயமான சிருஷ்டி லோகத்தின் அற்புத அம்சங்கள்
☆ பிரபஞ்ச இடத்தில் பிரபலமான வாய்ப்புகள்
☆ உணர்ச்சி வேகம் கொண்ட உயிர் பிழைக்க முயன்று
☆ கடுகளவு கருத்து விலங்கென விளங்கும் விசாலமற்ற வீதி
☆ உடலின் வேதனைகட்கும், தேவையான மகிழ்ச்சிக்கும்
☆ கட்டை எரிந்து சாம்பலாகி வளரும் நெருப்பு
☆ ஏற்பதால் வளர்ந்து, ஏற்றதை உரிமையாக்கி
☆ சேர்ந்து வளர்ந்து எவருக்கும் எதுவும் அளிக்காமல்
☆ தன் குகையில் தனக்குப் பெருமையை நாடும்
☆ சிறு காரியங்களில் மகிழ்ந்து வென்று
☆ தனக்கும் தமருக்கும் வாழ வழி தேடி
☆ மேயுமிடத்தில் அதை நம்பி வாழும் விலங்கு போல்
☆ வீட்டுக்குள்ளேயுள்ள விண்ணவரை அறியாமல்
☆ பெரிய ஆழ்ந்த இலட்சியம் எதுவுமின்றி
☆ அளவோடு செயல்பட்டு வெற்றி கண்டு

❋❋❋

**ஜீவிய மணி**

***முழுமையின்றி முழு உயர்வில்லை.***



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/84) சிருஷ்டி வந்த பின்னரே சத்தியம் தன்னையறியும். பரம்பொருள் தன்னையறிய வேண்டியதில்லை.**

- **எந்த அவசியமுமற்ற பரம்பொருள்.**

- கடவுளை எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவனென்கிறோம்.
- மனிதன் தேவைகளாலானவன்.
- தேவை ஆசையை எழுப்புகிறது.
- சக்தி ஆசையாக மாறி திறமை உற்பத்தியாகிறது.
- திறமைசாலியைப் போற்றுகின்றனர். அது பிரபலம்.
- சிறியவனின் பெரும் திறமை பெரியவனுக்குப் பலஹீனம்.
- தேவை புறம், ஆசை அகம்.
- திறமையின் அடிப்படைகள் அகத்திலும், புறத்திலும் மனிதனைக் கட்டுப்படுத்துகின்றன.
- வாழ்வில் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது திறமை, வல்லமை.
- பிறர் நம் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவது வாழ்வின் சிகரம், பதவி, அந்தஸ்து.
- அதிகாரம் அதை நிர்பந்தமாகச் செய்கிறது.
- அன்பு அதைப் பிரியமாகச் செய்கிறது.
- தலைவன் தேவையைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பு தொண்டனுக்கு பாக்கியம்.
- தேவையைக் கடந்தவன், மனித நிலையைக் கடந்தவன்.

- மனிதன் தெய்வங்களைப் பாடிப் புகழ்ந்து துதிக்கிறான்.
- பொருள் தேவையற்ற தெய்வத்திற்குப் புகழ் தேவைப்படுகிறது.
- எதுவும் தேவைப்படாதது பரம்பொருள்.
- எதுவும் தேவைப்படாத பரம்பொருள் ஏற்படுத்திக் கொள்ளும் தேவை சிருஷ்டி.
- *'தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே'* என்றார் சுவாமி.
- அதுவே மனித முயற்சியின் புனித உருவச் சிகரம்.
- அதுவும் தேவையற்றது பரம்பொருள்.
- வாழ்வு முன்னேறும் பொழுது மனிதன் நாடித் துடிப்பது, அவனைத் துடித்துத் தேடி வரும்.
- டார்சி அவளுக்காக உயிரை விட்டான்.
- அவள் துச்சமாக அச்சமின்றி வாய்க்கு வந்தபடி திட்டினாள்.
- உலகில் எதுவும் அனந்தம், திட்டுவதும் அனந்தம்.
- எதைப் பெறுகிறோமோ அதனால் அது பெருகுவது அனந்தத்தின் குணம்.
- அதனால் ''செலவு செய்தால் வருமானம் வரும்'' என்று அன்னை கூறுகிறார்.
- இதன் தத்துவம்:

  செய்யும் செலவு, செலவு செய்வதை அதிகரிக்கும்.
  செலவு அதிகமானால் வரவு அதிகமாகும்.
  வரவு அதிகமாகாமல் செலவு செய்ய முடியாது.

  செலவு அதிகரித்தால் வரவு வளரும் என்பது அனந்தத்தின் அடிப்படை.
- டார்சியைத் திட்டும்பொழுது எலிசபெத் தன்னுள் திட்டு வளர்வதைக் கண்டாள்.
- அது மேதா விலாசம் genius. அதை அவள் விரும்பி



அனுபவித்தாள்.

(p.199 of the book *Pride and Prejudice)*

- அவ்வளவு திட்டும் அவனைப் புறத்திலிருந்து அகத்திற்குக் கொண்டு போயிற்று.
- சமூக சட்டப்படி அவள் அவனுக்குத் தேவையில்லை, துச்சம்.
- அவன் நிலை சமூகத்தைக் கடந்த உள்ளம் உணரும் மனநிலை.
- தேவையற்ற நிலையில் தேவையை எழுப்புவது பரம்பொருளின் சிருஷ்டி.
- பரம்பொருள் பக்தனை அப்படியே விழைகிறது.
- பக்தனைப் பரம்பொருள் தன்னில் உயர்ந்ததாகக் கருதுகிறது.
- தன்னையிழந்த பரம்பொருள் தன்னை உணர்வது பக்தன் நிலை.
- அந்நிலைக்கு உதவுவது பரம்பொருளின் பெரும் கடமை - அருள்.
- டார்சி அந்நிலையில் அவளை நாடினான்.
- அதன் விளைவாக அவனிடம் மன்னிப்புக் கேட்கும் நிலை அவளுக்கு ஏற்பட்டது.
- *விழைநர் விழப்படுவார் நிலை* - குறள் - அது தான் விரும்புபவர் தன்னை விரும்பும் நிலை செருக்கு தருவது என்கிறார் வள்ளுவர். அதுவே டார்சி நிலை.

✲✲✲

## II/85) தன்னையறியாமல் தானாக இருக்க அது பிரம்மமாக இருக்க வேண்டும்.

- **எந்த நிலையும் சொந்த நிலையானது பிரம்மம்.**

- ஆதி, மூலம், சிருஷ்டிக்கப்படாதது, பிறப்பு இறப்பறியாதது பிரம்மம் எனப்படும்.

* மேல் நாட்டார் அதை Absolute என்பர்.
* ஆதியில்லாதது அனாதி.
* ரூபமற்றது அரூபி.
* அந்தமற்றது அனந்தம்.
* எதற்கும் பிறப்புண்டு, பிறந்தறியாதது பிரம்மம்.
* பிறந்தது இறப்பது சட்டம், பிரம்மம் பிறக்கவில்லை என்பதால், அதற்கு இறப்பில்லை.
* எவரும் பிரம்மத்தை சிருஷ்டிக்கவில்லை, அதனால் அது சுயமானது.
* அது எங்கும் நிறை பரம்பொருள்.
* அது எல்லாம் வல்லது.
* அது எதையும் அறிய வல்லது.
* பிரம்மம் ஜீவன், பிரம்மம் ஜீவியம், பிரம்மம் ஆனந்தம்.
* எதற்கும் அமைப்புண்டு, பிரம்மத்திற்கு அமைப்பில்லை. அமைப்பற்றது சாந்தி.
* சப்தமற்றது நிசப்தம், எண்ணமற்றது மௌனம்.
* எண்ணமற்றதும் மௌனம், அசைவற்றதும் மௌனம்.
* அசைவற்ற மௌனம், எண்ணமற்ற மௌனத்தைக் கடந்தது.
* எண்ணமும், அசைவுமற்ற மௌனம் பிரம்மத்திற்குரிய மௌனம்.
* பிரம்மம், சச்சிதானந்தப் பிரம்மத்தைக் கடந்தது.
* பிரம்மம் சிருஷ்டித்த பொழுது, முதலில் எழுந்தது சச்சிதானந்தம்.
* சிருஷ்டி என்பது பிரம்மம் அகம், புறமாகப் பிரிவது.
* மாயை சிருஷ்டியின் கருவி.
* அநித்தியமானவையின் அஸ்திவாரமான நித்தியம் பிரம்மம்.
* ஜீவியமுடையவற்றின் அடிப்படை ஜீவியம் பிரம்மம்.



* மனிதனின் மகத்துவம் பிரம்மம்.
* சகல ஜீவராசிகளின் மகிமை பிரம்மம்.
* பிரம்மம் ஒரு ஜீவன்.
* பிரம்மம் ஜீவியமான ஜீவன்.
* ஜீவன் சிவன், ஜீவியம் காளி.
* ஜீவனின் ஜீவியமான சக்தி ஹிருதய சமுத்திரம்.
* ஆதியும் அந்தமுமற்ற பிரம்மம் அனாதி, அனந்தம்.
* பிரம்மம் காலத்தையும், இடத்தையும் கடந்தது.
* ஜீவன் ஜீவியமாக உள்ள நிலை ஆனந்தம்.
* அனைத்தும் ஆனந்தத்தில் உற்பத்தியாகி, ஆனந்தத்தால் ஆதரிக்கப்பட்டு, ஆனந்தத்தில் முடிகிறது.
* சிருஷ்டியில் ஜடம் ஆனந்தமயமான ஜீவன்.
* பிரம்மம் பிரபஞ்சத்தில் ஆன்மீக சக்தியாகிறது.
* ஆன்மீக சக்தியை மனம் தன் புலனால் அறியும் பொழுது, அது ஜட சக்தியாகும்.
* இந்த சிருஷ்டியை பிரம்மம் அஞ்ஞானத்தாலானதாகச் செய்தது.
* சிருஷ்டிக்கு அஞ்ஞானம் தேவையில்லை.
* இந்த சிருஷ்டிக்கு அஞ்ஞானம் இன்றியமையாதது.
* பிரம்மம் பொருளாகும்.
* பிரம்மம் சக்தியாகும்.
* பிரம்மம் ஆனந்தமாகும்.
* அகமான பிரம்மம், புறமான சிருஷ்டியாவது அது தன்னை மனத்தின் பிரதிபலிப்பாகக் காண்பது.
* ஆனந்தமயமான பேரானந்தத்தை நாடி சிருஷ்டித்தது.

*தொடரும்....*

❃❃❃

## அன்னைக்குச் செயல் எனில் மனிதனுடன் பேசுவது

* கவிஞனுக்கோ, எழுத்தாளனுக்கோ அவன் மனதில் எழுவதில் ஒரு பகுதியைக் கூட வெளியிட முடியாது.
* செய்யுளாக எழும் உணர்ச்சியை உரைநடையாகக் கூறுவது கடினம். கொச்சை பாஷையில் சொல்ல முடியுமா? எவ்வளவு சொல்லலாம்? அதைச் செய்ய மனம் எப்படிக் கூசும்?
* நேரு கேம்பிரிட்ஜில் படித்தவர், அறிவாளி, பெரிய குடும்பத்தில் பிறந்தவர், தலைவர், பெரும் சிந்தனையாளர், அடிக்கடி கிராம விவசாயிகளுடன் பேசுவார். என்ன பேசுவது? எப்படிப் பேசுவது?
* பாரத மாதாவுக்கு 'ஜே' எனக் கோஷம் போட்ட கூட்டத்தை நோக்கி, "யார் பாரத மாதா? எங்கிருக்கிறார்?" எனக் கேட்டார்.
* பாரத மாதா யார் எனக் கூறவே அன்றைய சொற்பொழிவு முழுவதும் செலவாயிற்று.
* உயர்ந்த நிலையிலுள்ள மனம் எளிமையான மக்களைச் சந்தித்துப் பேசக் கூசும்.
* பரம்பரையின்றி படிப்பால் உயர்ந்தவனைப் பண்புள்ள பெரிய குடும்பத்துப் பெண் மணந்தால், எதைக் காதால் கேட்க அவள் கூச்சப்படுவாளோ அதை உரிமையாகக் கேட்கும்படி கணவன் வற்புறுத்தினால் அவளுக்கு உடம்பெல்லாம் கூசும்.

  லோபஸ் என்பவன் அப்படி மேரியை மணந்தான்.
* அங்கு உரிமையற்றதைக் கொடுத்தால் பரிசு பெரியதானாலும் பெற்றுக் கொள்ளமாட்டார்கள். வற்புறுத்தினால் வருத்தம் எழும்.



* லோபஸ் மனைவியை அவள் தகப்பனாரைப் பணம் கேட்கச் சொல்கிறான். அவள் உடலெல்லாம் எரிகிறது.
* தலைவர் பொய் மட்டும் சொல்பவரானால், தொண்டன் பொய்யே சொல்லாதவனெனில் தொண்டன் நிலை தர்ம சங்கடம்.
* அன்னை நம்மிடம் பேசும் பொழுது அவர்கள் ஜீவியத்திற்கும், நம் ஜீவியத்திற்கும் உள்ள இடைவெளி உடலில் கூச்சமாக எழுகிறது என்கிறார்.
* சூட்சும உலக சட்டப்படி ஒருவருக்குப் பெரிய சொத்து வர இருக்கும் பொழுது தரித்திரமான ஒருவர் காரில் லிப்ட் கொடுத்தால், இந்த லிப்டில் அந்த பெரிய அதிர்ஷ்டம் தவறி விடும் என்பது சட்டம்.
* இரண்டாம் கணவன் தன் ஏழை நண்பன் பாதிரியாருக்கு உதவ £50 பவுன் கொடுத்த பொழுது பணக்கார மனைவி நல்லெண்ணத்தால் £20 கவருள் வைத்தாள். அப்பணம் அவள் முதல் கணவர் கம்பனியிலிருந்து வந்தது. முதற்கணவர் தங்கமான மனம் உடையவர். இறந்தபின் அவள் மறுமணம் செய்து கொண்டாள். பெண்ணின் தகப்பனார் £800 பவுன் சம்பாதித்தது அவள் முதல் கணவனால், அவர் சீர்திருத்தத்தால், £200 பவுனாயிற்று. ஏழைப் பாதிரியார் £20 செக்கை திருடியதாக அவர் மீது வாரண்ட் வந்து அவதிப்பட்டார்.

  எண்ணம் நல்லதானால் ராசியும் நல்லதாக இல்லாவிட்டால் பரிசு வாரண்ட் கொண்டு வரும்.

  இது தெரிந்தால் பாதிரியார் அதைப் பெற்றிருப்பாரா?
* அன்னை தெரிந்து பெற்றுக் கொள்கிறார், நம்மிடம் பேசினார், அவர் பட்ட அவதி பெரியது.

❋❋❋

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 72. முடிவு செய்தால் காரியம் பூர்த்தியாகும்

- ஒரு காரியம் பூர்த்தியாக அதைச் செய்ய வேண்டும்.
- நாமாகச் செய்யாமல் காரியம் எப்படித் தானே பூர்த்தியாகும்?
- நாம் நினைப்பதை, முடிவு செய்வதை சந்தர்ப்பம் பூர்த்தி செய்யும்.
- சந்தர்ப்பம் என்பது புறம், புறச் சூழல். தத்துவ பாஷையில் புறம் என்பது இடம்.
- ஆன்மா அகம், புறமாகப் பிரிந்து, அகம் எண்ணமாகவும், புறம் இடமாகவுமாகிறது.
- காரியம் தானே பூர்த்தியாவது, இடம் கட்டுப்படுவது, ஆன்மாவின் ஒரு பகுதி கட்டுப்படுவது.
- ஆன்மாவின் பகுதி கட்டுப்படுவதால், பூரண யோக வாயில் திறக்கும்.
- இதை Silent Will மௌனமான மனோ சக்தி எனப் புரிந்து கொள்ளலாம்.
- முடிவு பூர்த்தியாவது, நினைவு பூர்த்தியாவது பெரிய ஆன்மீக நிலைகள்.
- Encyclopedia கலைக் களஞ்சியத்தைப் பாட புத்தகமாகக் கொண்டால் எதைப் படிப்பது, எந்த வரிசையில் படிப்பது என்பதைத் தயார் செய்ய அந்த முப்பது வால்யூம்களைப் படிக்க வேண்டும். இந்தப் பெரிய வேலையை நான் மேற்கொண்டேன். Encyclopediaவை ஒரு அன்பர் பரிசாக வாங்கிக் கொடுத்தார். நான் படிக்க ஆரம்பிக்குமுன் குதர்க்கமான தலைவர் அதை எடுத்துக் கொண்டார். புதிய செட் வாங்க ஒரு வருஷம் ஆயிற்று.



அது பதினைந்தாவது பதிப்பு. முப்பது வால்யூம் அமைப்பைப் பாட புத்தகமாக மாற்றி அட்டவணையை ஒரு வால்யூமாக தயாரித்தனர். எனக்கு 30 ஆண்டு வேலையை கம்பனியே எடுத்துச் செய்துவிட்டது.

*என் முடிவை கலைக் களஞ்சியமே செய்துவிட்டது.*
*அந்த மாற்றம் செய்ய அவர்கள் முப்பத்திரண்டு கோடி செலவு செய்தனர்.*

- நினைவு பலிப்பது இதைக் கடந்த கட்டம்.
- ஆழ்மனம் அந்த நாளில் நினைத்து மறந்தது, இந்த நாளில் பலிப்பது அடுத்த கட்டம்.
- நாம் விரும்பியதையே நாம் மறந்த நிலையது.
- கற்பனைக்கும் எட்டாதது, இப்படி ஒரு வசதி உலகிலிருப்பதே தெரியாது என்ற நிலைகளும் பலிப்பது அடுத்தது.
- நம் நினைவு அடுத்தவர்க்குப் பலிப்பது.
- உலகத்திற்குப் பலிப்பது.
- உலகத்திலில்லாததை நம் எண்ணம் உலகத்திற்கு உற்பத்தி செய்வது ஆகியவை யோகியின் மன நிலைகள்.
- உலகிலில்லாததைக் கடந்த நிலையில் சிருஷ்டியில் இல்லாததுண்டு.
- பன்னெடுங்காலமாக இறைவன் - பிரம்மம் - 'முயன்று' சூட்சுமத்தைக் கடந்த காரண லோகத்தில் சாதித்ததைப் பகவான் இறைவன் வரும் தருணம் எனக் கூறுகிறார். அந்த ஆன்மீகப் பரிசை, பிரம்மத்தின் பிரம்மாண்டமான பரிசாக உலகில் மனிதனுக்குக் கொடுக்க இறைவனே முடிவு செய்தது,

***ஸ்ரீ அரவிந்த அவதாரம்.***
***அதைப் பூர்த்தி செய்ய எழுந்த இரண்டாம் அவதாரம் அன்னையின் அவதாரம்.***
**அவர்களை அறிவதும் ஆன்மீக பாக்கியம்.**

***அந்த பாக்கியத்தைக் காரியம், பணம், வசதியால் கணக்கிடுவது சரியில்லை.***

- உபநிஷதங்கள் எழுந்தபொழுது, "வேத பாடம் தர முடியாதது" என உபநிஷதங்களைக் கூறுகின்றன.

  பகவத் கீதை "எந்த வேதமும், உபநிஷதமும் தர முடியாத ஆன்மீகச் செல்வம்" எனத் தன்னை வர்ணிக்கிறது.

  கீதையின் யோகம் யோகத்தில் சிறந்த ராஜ யோகத்தைக் கடந்தது என்கிறார் பகவான்.
- கீதையின் யோகம் வளர்ந்து வரும் நிலையில், முடிவுக்கு முன்னால் நின்று விடுகிறது எனக் கூறுகிறார்.
- கீதை தெய்வீக மன சக்தி. அதற்கு மனித சுபாவத்தை மாற்றும் திறனில்லை என்கிறார்.
- மகாத்மா காந்தி வாழும் இவ்வுலகில் வாழ்பவர் பாக்கியசாலிகள் என்றார் ஐன்ஸ்டீன். பகவானும் அன்னையும் வாழும் உலகில் வாழ்ந்தவர் அந்த பாக்கியம் செய்தவர்.
- அந்த யோகம் செய்யும் தகுதி உலகிலும், வானுலகிலும் பெரிய வாய்ப்பு.
- பிருந்தாவனம், கோகுலம், சிவ லோகம், வைகுந்தம், சொர்க்கம் என்பவை உயிருக்குரிய சொர்க்கங்கள். மனம் அதைக் கடந்தது. மனத்தின் நிலைகள் நான்கு. சத்திய ஜீவியம் அவற்றையும் கடந்தது. அவை மோட்சம்.
- இது மோட்சம் திருவுருமாறிய அற்புதம்.

✲✲✲

## 73. பழைய குறை புதிய நிறைவாவது

- உலகில் குறையென ஏற்பட்டால், அது நீடிக்கும், வளரும், தொடரும்; அடுத்த ஜென்மத்திற்கும் வரும்.



- குறை தீர்வது கல் அகல்யா ஆவது, அது பெரிது.
- எழுவகை அஞ்ஞானம், எழுவகை ஞானமாவது பூரண யோகம்.
- தொழிலாளி முதலாளியாவதுண்டு, சிஷ்யன் குருவாவதும் உண்டு.
- முதலாளி, பழைய தொழிலாளி முதலாளியான பின் அவனிடம் தொழிலாளியாவது அரிது.
- குரு, சிஷ்யனுக்கு சிஷ்யனாவது அரிது.
- இவை வாழ்க்கையின் அம்சங்கள், சில அரிதானவை.
- அஞ்ஞானம் ஞானமாவதும், குறை நிறையாவதும் ஆன்மீகத்திலும் அரிது.
- எந்த வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து சாப்பிட்டானோ, அதே வீட்டு நடு வீட்டில் சிறப்பான விருந்தாளியாவது பெரிது.
- இதன் தத்துவம் திருவுருமாற்றம்.
- சிறியது தான் பெரியதென உணர்ந்து பெரியதாவது.
- புஞ்சை நிலம் நஞ்சையாவது.
- காலேஜ் அட்மிஷன் கிடைக்காதவன் காலேஜ் ஆரம்பித்து நடத்துவது.
- தீமை திருவுருமாறி நன்மையாவது.
- V.P.மேனன், படிப்பும் வேலையுமில்லாதவன், பெரிய அதிகாரியாகி கவர்னரானது அரிது.
- V.P.மேனன் பத்து வகுப்புப் படிக்கவில்லை. சிம்லா வர உதவி கேட்டுப் பெற்று, சிம்லாவில் சர்க்கார் வேலை பெற்றுயர்ந்து, வைஸ்ராய், காரியதரிசியாகி கவர்னரானது சரித்திரம்.
- பொதுவாக முயற்சியுடைய எந்த இளைஞனும் இந்தியன் என்பதால் பெறும் பலனிது என நம்ப முடியாது.
- இந்தியா புண்ணிய பூமி, ஆன்மீக நாடு.
- இந்தியர் உடலில் ஆன்மீக ஜோதியுண்டு.
- முயற்சி, சிரமம், ஆர்வம் அதை வெளிக் கொண்டு வரும்.

- ஜோதி தலைகாட்டினால், வேகம் அதிகமாகும்.
- இது நம் நாட்டு இளைஞர் நிலை.
- இது நம் மண் பெற்ற பேறு.
- அமெரிக்க இளைஞர் பெரும் பணம் சம்பாதிக்கின்றனர்.
- இந்தியர் பெரு“வெற்றியைப்” பெறுவர்.
- பணமும், சொத்தும், அந்தஸ்தும் “வெற்றி”யுள் அடங்கும்.
- குறை அகல்வது முதல் நிலை.
- குறை நிறைவாவது அடுத்த நிலை.
- குறை பெருநிறைவாவது திருவுருமாற்றம்.
- ரத்தம் வர அடித்த ஆசிரியர் தலைமையாசிரியரான பின் அடிபட்ட மாணவன் DEOவாக இன்ஸ்பெக்ஷனுக்கு வந்தது நிலைமைக்கு நிறைவு.
- DEO தலைமை ஆசிரியருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அதிகாரத்தைச் செலுத்த மறுத்தது DEOவின் ஆன்மீக வெற்றி.
- அரசியல் தலைவர்களுக்கு எதிர்கட்சி போய் ஆளும் கட்சியானால் எழும் நிலையிது.
- ஓடம் வண்டியிலும், வண்டி ஓடத்திலும் செல்லும் அம்சம்.
- தகப்பன் சுவாமி என்ற நிலையும் உண்டு.
- மனம் அடங்குவது மகோன்னதம்.
- மனம் அடங்கியவர் பெறும் உயர்நிலைகள் இவை.
- மோட்சத்தை விலக்கி திருவுருமாற்றம் நாடும் யோகமிது.
- ஆன்மீக திருவுருமாற்றம் முடிவானது.
- பணக்காரன் பிள்ளைகள் படிக்காவிட்டால் பணம் போய்விடும்.
- படிப்பு பணத்தைப் பாதுகாக்கும்.
- படிப்பைக் கடந்த நிலை பண்பு, பதவி, அந்தஸ்து, நாணயம்.
- அவை பணத்தைப் பாதுகாக்கும்.

*தொடரும்.....*



# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 11. பூரண யோகி ஸ்ரீ அரவிந்தர்

உலகம் என்று தோன்றியதோ அன்றே துன்பங்களும், துயர்களும் தோன்றிவிட்டன. இவற்றின் பிடியிலிருந்து விடுபடுவதற்காக உலகத் தொடர்புகளையும், பந்தங்களையும் அறுத்துக்கொண்டு, பற்றற்ற பரம்பொருளைப் பற்றிக்கொள்ளும்போது சித்திப்பது மோட்சம். மோட்சத்தை விரும்பாத யோகிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

“பல்லாயிரக்கணக்கான உயிர்கள் துன்பத்தில் வாடும்போது எனக்கு மட்டும் மோட்சம் எதற்கு?” என்று அரிதான மோட்சத்தை உதறித் தள்ளியவர் சுவாமி விவேகானந்தர். ‘‘உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்தும் துன்பத்திலிருந்து விடுபட்டு மோட்சத்தை அடையும்வரை நானும் மோட்சத்திற்குச் செல்லப் போவதில்லை” என்று சூளுரைத்தவர் புத்த பகவான். பகவான் ஸ்ரீ அரவிந்தரும் அவர்தம் மரபில் வந்தவர்தாம். பெறற்கரிய மோட்சம் அவரைத் தேடி வந்தபோது அதை ஏற்காது, “உலகிலுள்ள துன்பங்களையும், தீமைகளையும் அழிக்க தமக்குத் தக்கதொரு வழிகாட்ட வேண்டும்!’’ என்று இறைவனிடம் கேட்டுக் கொண்டார்.

மோட்சத்தை அடைய பல மார்க்கங்கள் உண்டு. அவற்றில் ஞானம், பக்தி, கர்மம் என்பவை முக்கியமானவை. மோட்சத்தையே குறிக்கோளாகக் கொண்டவர்களுக்கு மனித உடல் பொய்யாகவும், காற்றடைத்த பையாகவும், துன்பக்கடலைத் தாண்டவிடாமல் தடுக்கும் பெருந்தடையாகவும் தோன்றுகிறது. ‘இவ்வுடலைத் துறந்தாலன்றி

மோட்சம் கிட்டாது' என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்டதொரு சித்தாந்தமாகிவிட்டது.

ஞானத்தை அடைந்தவன் தன்னைச் சூழ்ந்துள்ள சிலருக்கு மட்டுமே அந்த ஞான ஒளியை வழங்க முடிகிறது. ஒரு பக்தனிடமிருந்து வெளிப்படும் இறையன்பு, மக்களை எல்லாம் ஈர்த்தாலும், அது நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. ஒரு கர்மயோகியின் செயல்கள் மற்றவர்கள் எவ்வாறு தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துவிடுகிறது. எனினும் மனித இனம் அடிப்படையில் மாற்றம் ஏதும் காணாமல் அப்படியே இருந்து வருகின்றது.

பல்லாயிரம் ஆண்டு காலமாக ஞானிகளும், ரிஷிகளும், யோகிகளும் இம்மனித இனத்தை மாற்ற வேண்டும் என்று முயற்சி செய்து வந்தாலும், துன்பமும், இருளும் நீங்கியபாடில்லை. மோட்ச உலகிற்குச் சிலர் செல்வதால் இவ்வுலகத்திற்கு ஏற்படும் நன்மை மிகக்குறைவு. ஆகவே 'துன்பத்தையும், இருளையும் முற்றும் நீக்க வேண்டுமானால் மோட்சச் சொரூபனான இறைவனையே இவ்வுலகத்திற்கு வருமாறு செய்வித்தல் வேண்டும்' என்று உணர்ந்தார் ஸ்ரீ அரவிந்தர்.

''இறைவனுடைய ஒளியும், அன்பும், சக்தியும் இம்மனித உடலிலேயே வெளிப்படுமாறு செய்ய வேண்டும். பொய்யின் வடிவாகவும், மோட்சத்திற்குத் தடையாகவும் உடலைக் கருதுவது தவறாகும். இவ்வுடலில் பொய்யும், தடைகளும் இருப்பது உண்மையே. அதற்காக உடலே பொய் என்றோ, தடை என்றோ கருதக்கூடாது. இறைவன் இவ்வுலகில் அல்லது இவ்வுடலில் வெளிப்படுமாறு செய்வது என்பது மிகக்கடினமான முயற்சி. அதோடு மோட்சத்தை அடைவதற்குச் செய்யும் முயற்சியை ஒப்பிடும்போது, மோட்சத்திற்குப் போவது மிகவும் சுலபம் என்றே சொல்ல வேண்டும். இறைவனை இவ்வுலகத்திற்குக் கொண்டு வரும் முயற்சி, ஒரு தனி மனிதனின்



முயற்சியாக இருக்க முடியாது. அது ஒரு கூட்டு முயற்சியாகத்தான் இருக்கும்'' என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

பத்து அல்லது இருபது நபர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டு, தம்முடைய உடலில் உள்ள பொய்யையும், தடைகளையும் நீக்கி இறைவனுடைய குணங்களை அதில் வெளிப்படுமாறு செய்வதால், இவ்வுலகத்தில் வாழும் மற்ற உயிர்களைப் பற்றி நிற்கும் துன்பமும், இருளும் நீங்க வழி கிடைக்கின்றது. விஞ்ஞானிகள் சிலர் கூட்டாக சேர்ந்து செய்கின்ற முயற்சியினால் விளைகின்ற ஒரு பலனை, உலகில் உள்ளோர் அனைவரும் அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுகின்றார்களே, அதைப் போன்றதுதான் இது.

யோக மார்க்கங்களுடைய முடிவாக இருப்பது மோட்சம். ஆனால் ஸ்ரீ அரவிந்தருடைய பூரண யோகத்தில் 'மோட்சம்' என்பது முதற்படியாக அமைகின்றது. பாண்டிச்சேரிக்கு வருவதற்கு முன்னரே மோட்ச அனுபவத்தைப் பெற்றவர் அவர். ஆனால் உடலையும், உலகத்தையும் துறக்கவோ அல்லது 'மோட்சமே யாவும்' என்று அதை அடையவோ அவர் விரும்பவில்லை. அலிப்பூர் சிறையில் அவர் இருந்தபொழுது 'சர்வம் வாசுதேவம்' என்ற அரிய காட்சியைப் பெற்றார். 'எல்லா உயிர்களிடத்தும், பொருட்களிடத்தும் இறைவன் வாசம் செய்கின்றான்' என்பதை அங்கு அனுபவபூர்வமாகக் கண்டார். இறைவனுடைய ஆணை அவரைப் பாண்டிச்சேரிக்கு அனுப்பி வைத்தது. அங்கு அவருடைய யோகம் தீவிரம் அடைந்து பன்மடங்காகப் பெருகியது. வரையறையற்ற பேரமைதி அவரிடம் குடி கொண்டது. புயல் வீசுகின்ற காலங்களில் அவர் இருந்த அறையில் ஜன்னல் கதவுகள் மூடப்படாதபோதும் ஒரு மழைத்துளிகூட உள்ளே நுழைந்தது இல்லை.

ஒரு சமயம், அன்னையின் கணவர் ரிச்சர்டிடம் பேசிக் கொண்டிருக்கும்பொழுதே 'அகண்ட மௌன' அனுபவத்தை அன்னைக்கு வழங்கிய சித்தர் ஸ்ரீ அரவிந்தர். கிருஷ்ண பகவான்

அவருடைய உடலில் வந்து தங்கியிருந்த பெருமையும் பெற்றவர். ஒரு தடவை சாதகர் ஒருவருக்கு விளக்கம் கூறும்பொழுது சிவபெருமான் தம்முடைய ஓர் அம்சம் என்பதை அவர் வெளிப்படுத்தினார். இறைவனுக்குத் தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொண்ட அவர், இறைவன் இவ்வுலகிலேயே வெளிப்பட வேண்டும் என்று விரும்பினார்.

தம்முடைய அறையிலேயே தனித்திருந்து கடுமையான யோகத்தில் இருந்தார் ஸ்ரீ அரவிந்தர். இறைவனுடைய குணங்கள் அவருடைய உடலில் வெளிப்படும் நேரம் நெருங்கியது. அவரது உடல் அக்குணங்களை வெளிப்படுத்தும் அளவிற்குப் புனிதத் தன்மை அடைந்திருந்தது. அதோடு இன்னொரு நிபந்தனையும் நிறைவேற்றப்பட வேண்டும். இறைவன் இவ்வுடலில் நிரந்தரமாக வெளிப்பட வேண்டுமானால், ஸ்ரீ அரவிந்தர் மேற்கொண்ட முயற்சியை 10 அல்லது 20 யோகிகள் மேற்கொள்ள வேண்டும். அது மட்டுமன்று, அவர்களுடைய உயிரும் உடலும், ஸ்ரீ அரவிந்தருடைய உயிரும் உடலும் அடைந்து இருந்த புனிதத் தன்மையையும் பெற்றிருக்க வேண்டும். அவருடைய பெருமுயற்சியினால் இறைவனுடைய ஒளி இவ்வுலகில் வெளிப்பட்டது. வெளிப்பட்ட ஒளி அவருடைய உடலில் மட்டும்தான் தங்கியிருந்தது. மற்ற உடல்களில் அது வெளிப்பட வழியில்லாமல் போயிற்று. ஆனாலும் அந்த ஒளியை இவ்வுலகத்தைத் தொடுமாறு செய்விக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். தம்முடைய உடலைத் தியாகம் செய்வதன் மூலம், அதில் தங்கியுள்ள ஒளி இவ்வுலகோடு ஒரு குறுகிய கால அளவிலாவது தொடர்புகொள்ளும் என்று நினைத்தார்.

ஆகவே, ஸ்ரீ அரவிந்தர் 1950ஆம் ஆண்டில் தம் உடலைத் தியாகம் செய்தார். நான்கு நாள்களுக்கு ஒரு பொன்னிறமான புனித ஒளி அவருடைய உடலிலிருந்து வெளிப்பட்டு இவ்வுலகெல்லாம் பரவிக்கொண்டிருந்தது.



இவ்வுலகில் இறைவன் நிரந்தரமாக வெளிப்படுகின்றவரை ஸ்ரீ அரவிந்தரின் பணி தொடர வேண்டும். உலகின் சூட்சுமப் பகுதியில் இருந்து கொண்டு அப்பணியில் ஈடுபட்டிருக்கிறார் அம்மகான். தம்முடைய சொந்த லாபத்தைக் கருதி இருந்தால் அவர் மோட்சத்துக்குச் சென்றிருக்கலாம். ஆனால் அவர் அதை விரும்பவில்லை. தம்மை விடுக்கும்போதுதான் எதுவும் பூரணம் ஆகிறது. அந்தப் பூரணத்தில் பூரணமாக நிறைந்தவர் ஸ்ரீ அரவிந்தர்.

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

***நினைவே நிறைவை பாதிக்கும்.***

***கண் பார்த்தால் மனம் இழக்கும்.***

***நமக்கு மட்டும் உள்ளதே குறை.***

***நிறைவை நிறைவாக அறிய குறை எண்ணமாகவும் எழக்கூடாது.***

**ஜீவிய மணி**

***மனம் நோகாமல் பழகினால் அகந்தை கரையும்.***

***இதமும், இங்கிதமும் அகந்தை அழியும் வழி.***

# அன்னை வழியில் சாதனை

N. அசோகன்

நாம் பேச எடுத்துக் கொண்டுள்ள தலைப்பு "அன்னை வழியில் சாதனை". பொதுவாக வாழ்க்கையில் மனிதர்கள் பண பலம், அதிகார பலம், செல்வாக்கு என்றிவற்றைக் கொண்டுதான் சாதிக்கிறார்கள். இவை உதவாத நேரங்களுமுண்டு. அப்பொழுது ஆண்டவன் அருளை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. பெரிய பிரச்சினை இருப்பதையறிந்து **இறைவனின் அருள்** நாம் கேட்காமலேயே செயல்படுவதுமுண்டு. அது ஏன் இப்படித் தானாக செயல்படுகிறது என்பதை நாம் அறிய முடியாது. இரண்டாவதாக நாம் அழைத்து அது செயல்படுவதுமுண்டு. அருள் தானே செயல்படும் பொழுது அருளின் செயல்பாடு மிகச் சிறப்பாக இருக்கும். அருளால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதை நம்பி, நாம் அழைக்கும் பொழுது இதில் நம் பங்கு ஓரளவிற்கு வருகிறது. என்னால் அருளை செயல்பட வைக்க முடியும் என்று நம்பி அழைக்கும் பொழுது, அவன் தன்னையும் ஓரளவிற்கு நம்புகிறான் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த நம்பிக்கையையும் விட்டுவிட்டு அருளின் பார்வை பிரச்சினையின் மேல் பட்டால் பிரச்சினை முழுவதும் கரையும் என்று நினைப்பது நம்பிக்கையை அருளின் மேல் வைப்பதாகும். பொதுவாக இரண்டுமே கலந்துதான் வரும். ஏதாவது ஒரு பிரச்சினைத் தீரும் பொழுது அருளின் தன்னிச்சையான செயல்பாடும் அதே சமயத்தில் மனிதன் தானே முயற்சி எடுத்து அருளை அழைத்ததாகவுமிருக்கும்.

எல்லா பிரச்சினைகளையும் நம்மால் சொந்த பலத்தால் தீர்க்க முடியுமா? வருகின்ற பிரச்சினைகள் எல்லாமே நம்முடைய பண பலம், அதிகார பலம் என்றிவற்றால் மட்டும் தீர்த்துக் கொள்ள முடியுமா? குணப்படுத்த முடியாத நோய் ஒன்று வந்துவிட்டால் என்ன செய்வது? அதாவது இந்த வியாதிக்கு மருந்தேயில்லை, குணமாகவும் வழியில்லை என்று டாக்டர்கள் கை விரித்துவிட்டால் என்ன



செய்வது? அந்நேரம் அந்த நோயாளி என்ன செய்வது? அரசியல் பலம் கொண்ட ஒருவர் அரசியல் பலமில்லாதவரை எதிர்க்கிறார் என்றால், அந்த எதிர்ப்புக்கு ஆளானவர் எப்படித் தப்பிப்பது? இம்மாதிரி சந்தர்ப்பங்களில், வேறு வழியில்லாமல் இறைவனைக் கூப்பிட்டே ஆக வேண்டும். அன்னை பக்தர்களுக்கு இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் வருகின்றன. தொழிலதிபரான அன்னை பக்தர் ஒருவர் முதலமைச்சர் பதவியிலுள்ள ஒரு அரசியல்வாதியின் அதிருப்திக்கு ஆளானார். எந்த சமாதான முயற்சிக்கும் இந்த அரசியல்வாதி இணங்கவில்லை. எதிர்ப்பிலிருந்து தப்பிக்க பக்தருக்கு வழித் தெரியவில்லை. அன்னையிடம் பூரண தஞ்சமடைந்தார். அன்னை காப்பாற்றுவார் என்று தெரிகிறது. ஆனால் எதைச் செய்து எப்படிக் காப்பாற்றுவார் என்று மட்டும் தெரியவில்லை. எதிர்ப்பின் கடுமையைத் தாங்க முடியாமல் வருகின்ற மனச்சோர்வை எல்லாம் பொறுத்துக் கொண்டு, அன்னை தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையுடன் மட்டுமிருந்தார். பக்தர் அன்னை மேல் வைத்திருந்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஒரே மாதத்தில் முதலமைச்சர், பிரதமரின் அதிருப்திக்காளாகி பதவி நீக்கம் செய்யப்பட்டார். அத்தோடு அவர் எதிர்ப்பால் வந்த பிரச்சினை இவருக்குத் தீர்ந்தது. இப்படி எல்லாம் நடக்கும் என்று நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. ஆனால் இப்படித்தான் நடந்தது. மாரீஸ் குட்மேன் என்ற ஒரு விமான பைலட் அவர் ஓட்டிக் கொண்டு வந்த ஒரு சிறிய விமானம் விபத்திற்குள்ளாகி, அதனால் அவர் மிகவும் பலமாக பாதிக்கப்பட்டார். முதுகெலும்பும் மற்ற முக்கியமான எலும்புகளும் உடைந்துபோய் விட்டன. அவரால் நடக்க முடியாது, பேச முடியாது, உணவு உட்கொள்ள முடியாது. அவர் பிழைப்பதற்கு வழியே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இக்கருத்து அவருக்குத் தெரிவிக்கப்பட்ட பொழுது அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் அடிபட்டதோ ஜனவரி மாதத்தில், டிசம்பர் மாதம் கிருஸ்துமஸ் பண்டிகை சமயத்தில் தானே எழுந்து நடந்து அந்த ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறுவேன்

என்று தீர்மானம் எடுத்தார். அவர் கிருத்துவர் என்பதால் இவ்விஷயத்தில் அவர் ஏசுநாதரின் அருளைத்தான் மிகவும் நம்பினார். அவருக்குத் தெரிந்து அவர் ஏசுநாதரைத்தான் அழைத்தார் என்றாலும், உண்மையில் அவர் சத்திய ஜீவிய சக்தியைத்தான் அழைத்திருந்தார். ஏனென்றால் இவ்வளவு பெரிய விபத்திலிருந்து காப்பாற்றக்கூடிய சக்தி, சத்திய ஜீவியத்திற்குத்தான் இருக்கிறது. அவர் இப்படி ஒரு தீர்மானம் எடுத்திருப்பதையே அந்த ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர்கள் எவரும் நம்பவில்லை. மேலும் இதை சீரியஸாகவும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அவர் தீர்மானம் எடுத்தது போலவே செய்தும் காட்டினார். படிப்படியாக குணமடைந்து, நடக்க ஆரம்பித்தார், பேச ஆரம்பித்தார், உணவு உட்கொள்ளவும் ஆரம்பித்தார். இறுதியில் அவர் சொன்னது போலவே கிருஸ்துமஸ் தினத்தன்று தானே நடந்து ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினார். யாருமே பிழைக்க முடியாத ஒரு பெரிய விபத்திற்கு ஆளாகி, அவர் மட்டும் பிழைத்து எழுந்ததால், அவரை அதிசய மனிதர் என்று எல்லோரும் அழைக்கின்றார்கள். இப்பொழுது அவர் அமெரிக்காவில் பல இடங்களுக்குச் சென்று, சாதிப்பது எப்படி என்று சொற்பொழிவுகள் எல்லாம் நிகழ்த்துகிறார். இப்படிப்பட்ட அதிசயங்களை எல்லாம் நாம் பார்த்த பிறகும், கேள்விப்பட்ட பிறகும்கூட நம்மால் இப்படி நடந்தது என்று நம்ப முடியவில்லை. மீண்டும் ஒரு முறை இதே மாதிரி சோதனை வந்தால், அருள் மீண்டும் வெற்றிகரமாகச் செயல்படுமா என்று நமக்கு சந்தேகம்தான் வரும்.

வரித்துறையின் உயர்மட்ட அதிகாரிகள் ஒரு சேவை ஸ்தாபனத்தின் வரி விலக்கை இரத்து செய்தார்கள். விசேஷ நிபந்தனைகள் எல்லாம் விதித்து இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால்தான், வரி விலக்கு தொடரும், இல்லை என்றால் ரத்தானது ரத்தானதுதான் என்றார்கள். இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் நிலையில் சேவை ஸ்தாபனம் இல்லை. இந்தச் சேவை ஸ்தாபனம் எவ்வளவு சிறப்பாக சேவை செய்கிறது என்று புரிந்து கொள்ளும்



நிலையில் அவர்களில்லை. கீழ்நிலையிலுள்ள அதிகாரிகளிடமோ பேசிப் பலனில்லை. இவர்களுடைய அங்கீகாரத்தைப் பெறுவதென்பது, குணங்கெட்ட மாமியாரிடம் மருமகள் நல்ல பெயர் வாங்குவதற்கு சமமாகும். இப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட அன்பர் அன்னையை மட்டும் முழுமையாக நம்பினார். பணம் கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கு அவர் மனம் உடன்படவில்லை. நம்முடைய சேவை ஸ்தாபனத்தில் என்ன நடக்கிறது என்பதை உண்மையாக எடுத்துச் சொல்வோம். அவர் ஏற்றுக் கொண்டால் ஏற்றுக் கொள்ளட்டும் என்ற முடிவுடன் அன்பர் வரித்துறை அதிகாரியை சந்தித்து உள்ளதை உள்ளபடி சொன்னார். கால் மணி நேரம் கேட்டுக் கொண்ட அந்த உயரதிகாரி வரி விலக்குக் கேட்கும் உங்கள் கோரிக்கை நியாயமானது. நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். ரத்தான வரி விலக்கை நான் மீண்டும் அனுமதிக்கிறேன் என்று அன்பர் ஆச்சரியப்படும் வகையில் பதிலளித்தார்.

திருமணம் செய்து கொள்ள விரும்பும் பெண்களுக்கு அழகோ, இளமையோ, படிப்போ, பணமோ, ஏதோ இருக்க வேண்டும். இப்படி எதுவுமேயில்லாதப் பெண்களுமுண்டு. இப்படிப்பட்டவர்களுக்கு வயதும் ஆகிவிடும். இவர்களுக்கெல்லாம் அன்னையிடத்தில்தான் வழியுண்டு. இவ்வளவு துரதிர்ஷ்டம் இருந்தாலும், அன்னையிடம் வரக்கூடிய அந்தவொரு அதிர்ஷ்டமாவது இப்படிப்பட்ட துர்பாக்கியசாலியான பெண்களுக்கு இருக்கிறது. திருமணத்திற்கே வழியில்லாமல் அன்னையிடம் வந்த ஒரு துர்பாக்கியசாலியான பெண்ணிற்கு, யாருமே எதிர்பார்க்காத வகையில் கெனடாவிலிருந்து மாப்பிள்ளை ஒருவர் வந்து, சிறப்பாகத் திருமணம் செய்து கொண்டு, கெனடாவிற்கும் தன்னுடன் அழைத்துப் போனார். தன்னுடைய சொந்தக் குடும்பமே திருமண விஷயத்தில் அலட்சியமாக இருந்த பொழுது, கெனடாவிலிருந்து ஒரு வரன் வருவார் என்று எதிர்பார்க்க முடியுமா?

**2. அடுத்ததாக நான் வலியுறுத்த விரும்புவது அன்னையின் அருள், பணத்தைவிடப் பண்புகள் மூலம் சிறப்பாகச் செயல்படுவதாகும்.**

மனிதன் முன்னேறுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. *அவற்றுள் பிரதானமாக இருப்பது values என்று சொல்லலாம்.* பண்புகள் பிரதானமாக செயல்படும் இடம் business துறையாகும். ஆனால் பொதுவாக இத்துறையில் சுயநலமும், போட்டி மனப்பான்மையும்தான் பிரதானமாகக் காணப்படுகிறது. பொதுவாக அடுத்தவரை வீழ்த்தித்தான் தான் முன்னேற முடியும் என்று business துறையில் நம்புவார்கள். போட்டி மனப்பான்மை அவ்வளவு மிகுந்த துறையாகும் இது. ஆனால் கடந்த இருபது, இருபத்தைந்து வருடங்களாக விஷயங்கள் மாறி வருகின்றன. பண்புகளுக்கு முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றன. தமிழ் சினிமாத் துறையிலேயே இதற்கு ஒரு நல்ல உதாரணம் கொடுக்கலாம். கடந்த சில வருடங்களுக்கு முன்னால் முன்னணி நடிகர் ரஜினிகாந்த் அவர்கள் பாபா என்ற ஒரு படத்தில் நடித்தார். அந்தப் படம் படுதோல்வியடைந்து, ஏராளமான விநியோகஸ்தர்கள் பெருநஷ்டமடைந்தார்கள். பொதுவாக தமிழ் சினிமாத் துறையில் எந்தப் படமாவது பெரு நஷ்டமடைந்தால், படத்தில் நடித்த ஹீரோ நஷ்டத்திற்குப் பொறுப்பேற்பதில்லை. ஆனால் யாருமே எதிர்பார்க்காத வகையில் ரஜினிகாந்த் அவர்கள் அப்படத்தின் தோல்விக்கும், நஷ்டத்திற்கும் தான் பொறுப்பேற்க முன்வந்து, கோடிக்கணக்கில் நஷ்டஈடு வழங்கினார். அவர் எடுத்த முயற்சி வீண் போகவே இல்லை. அவருடைய அடுத்தப் படமான சந்திரமுகி அபார வெற்றி பெற்று, அவர் நஷ்டஈடாகக் கொடுத்தப் பணத்தை எல்லாம் மீட்டுவிட்டார். அவர் அன்னை பக்தரா? அன்னையை வழிபடுகிறாரா? என்பதெல்லாம் ஒரு பொருட்டேயில்லை. அவர் அன்னைக்குகந்த பண்புகளைக் கடைபிடிக்கும் பொழுது அன்னை அவருடனிருக்கிறார் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் தன்னுடைய தொழிலின் பண்புகளைக் கடைபிடிக்கும் பொழுது அன்னை அவரை கவனிக்கிறார், ஊக்குவிக்கிறார், பாராட்டுகிறார்.



ஆகையால், அன்னைக்குகந்த பண்புகள் பாராட்டப்படும் இடத்தில் அவர் கண்டிப்பாக இருக்கிறார் என்று நாம் சொல்லலாம். உதாரணமாக அமெரிக்கர்களுக்கு அன்னையைப் பற்றி அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அவர்கள் பாராட்டக்கூடிய பண்புகளான கடின உழைப்பு, திறமை, முன்னேறுவதில் காட்டும் ஆர்வம், அடுத்தவர் கண்ணோட்டத்தை மதித்தல், எந்தப் பிரச்சினையையும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற மனோதைரியம் என்றிவையெல்லாம் அன்னைக்கு மிகவும் உகந்த பண்புகள். அப்படியிருக்கும் பொழுது அந்த அளவில் அன்னை அவர்களோடு இருக்கிறார் என்றுதான் நாம் சொல்ல வேண்டும். மேற்பார்வையாக பார்த்தால் பெரிய முதலீடு மற்றும் பெரிய டெக்னாலஜி இவைதான் அமெரிக்காவை பணக்கார நாடாக்கின என்று நமக்குச் சொல்லத் தோன்றுகிறது. ஆனால் சற்று ஆழ்ந்து நோக்கினால் அது முழு உண்மை இல்லை என்று தெரிய வரும். எந்த ஒரு நாடும் எடுத்த எடுப்பிலேயே பெரிய முதலீடு எல்லாம் போட்டு பெரிய அளவில் தொழில் ஆரம்பிப்பதில்லை. சிறு அளவில்தான் ஆரம்பிக்கின்றனர். அந்த சிறிய முதலீட்டை படிப்படியாக வளர்த்துப் பெரிதாக்குவது தொழிலுக்கு உதவக்கூடிய பண்புகளான கடின உழைப்பு, திறமை மற்றும் organisation போன்றவைகளாகும். கடின உழைப்போடு அறிவை சேர்த்தால் பிஸினஸ் வளர்ச்சி பிரமாதமாக இருக்கும். உதாரணமாக Marriot Hotel இன்று உலகமெங்கும் பிரபலம் அடைந்துள்ளது.

அதற்குக் காரணமே Standard Operating Procedures என்று அவர் கண்டுபிடித்ததுதான். சிக்கலான வேலைகளையும் எளிமைப்படுத்தி அவற்றை step-by-step வேலைகளாக மாற்றும் பொழுது பெரிய ஹோட்டல் நிர்வாகம்கூட யாரும் சுலபமாகப் பின்பற்றக்கூடிய எளிய வேலையாக மாறுகிறது. ஆகவே இந்த stepக்களைப் பின்பற்றக்கூடிய எவரும் Marriot Hotels புதிய கிளையைத் துவக்க தகுதி பெறுகிறார்கள் என்றாகிறது. இம்மாதிரி

Andrew Carnegie என்ற அமெரிக்க மில்லியனரும் ஒரு புதிய அணுகுமுறையைத் தன் பிஸினெஸில் கடைப்பிடித்தார். Cost Accounting அணுகுமுறையை கடைப்பிடித்து இதில் அபார பலன் கண்டார். Cost Accountingபடி நாம் பார்க்கும் பொழுது மேலோட்டமாக விலை மலிவாகத் தெரிகின்ற பொருட்கள் எல்லாம் உண்மையில் விலை அதிகமாகத்தான் காட்டும். அதை வைத்துக் கொண்டு எது தொழிலுக்குத் தேவையானது, எது தொழிலுக்குத் தேவையில்லாதது என்பதைக் கண்டுபிடித்து, தேவையில்லாததை எல்லாம் விலக்கி, ஏராளமான விரயத்தைத் தவிர்க்கலாம். விரயத்தைக் குறைக்க, குறைக்க லாபம் அந்தளவிற்கு அதிகமாகும். இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி தன்னுடைய தொழிலில் ஏராளமான விரயத்தைத் தவிர்த்து தான் செய்த தொழிலில் எல்லாம் அபார லாபத்தைக் காட்டினார்.

பண்புகள் சாதிக்கக் கூடியதற்கு அளவேயில்லை. ஹிட்லர் இங்கிலாந்தைத் தாக்கிய பொழுது, இங்கிலாந்து, ஜெர்மனிக்கு ஆயுத பலத்தில் சமமாகவேயில்லை. இருந்தாலும் அந்நாட்டின் பிரதமர் சர்ச்சில் அவர்கள் மிகப்பெரிய தைரியசாலி. தன்னுடைய சிறந்த பேச்சாற்றல் மூலம் அதே தைரியத்தை அந்நாட்டு மக்களுக்கும் அவர் வழங்கினார். அந்த தைரியத்தால் ஊக்கம் பெற்ற இங்கிலாந்தும் சரண்டராகும் என்று ஹிட்லர் எதிர்பார்த்த பொழுது சரண்டராகாமல் வீறு கொண்டெழுந்து, பலமாகப் போரிட்ட ஹிட்லரைப் பின்வாங்கச் செய்தது. அடிமை நாடாக இருப்பதைப் பற்றி வெட்கமேபடாத இந்தியர்களின் தேசபக்தியை எழுப்பி, ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் ஆங்கில அரசை நிலைகுலைய வைக்கலாம் என்று காந்திஜி அவர்கள் மக்களுக்குப் புரிய வைத்து அதில் வெற்றி கண்டார். அமெரிக்காவில் 1929ஆம் ஆண்டு ஸ்டாக் மார்க்கெட் crashஆகி அதனால் வங்கிகள் எல்லாம் திவாலான பொழுது, அப்பொழுதிருந்த அமெரிக்க அதிபர் FDR அவர்கள் மக்களிடையே ரேடியோவில் பேசினார். ‘‘எதற்காக கவலைப்படுகின்றீர்கள்? நம்முடைய



தொழிற்சாலைகள், விளை நிலங்கள், நாம் நடத்தும் பிஸினெஸ்கள் எல்லாம் அப்படியேதான் இருக்கின்றன. எதுவும் மறைந்துவிடவில்லை. நமக்குத் தன்னம்பிக்கைதான் போய்விட்டது. அந்தத் தன்னம்பிக்கை மீண்டும் வந்தால் நிலைமை சரியாகிவிடும். யாரும் வங்கிகளில் போட்டப் பணத்தை பயந்துபோய் எடுக்க வேண்டாம். எடுத்த பணத்தை தயவுசெய்து மீண்டும் அந்த வங்கிக்கே சென்று போடுங்கள்” என்று இப்படி எல்லாம் பேசி, இழந்த தன்னம்பிக்கையை மீண்டும் மக்களிடையே வரவழைத்தார். அதுவொரு அதிசய மருந்து போல் வேலை செய்தது. அமெரிக்கப் பொருளாதாரம் சகஜ நிலைமைக்குத் திரும்பியது.

பண்புகளுக்குச் சிறந்த உதாரணமாக நாம் டார்சியையே காட்டலாம். திருமண proposal கொடுக்கும் பொழுது நிராகரிக்கப்படுவதோடு மட்டுமின்றி அவமானப்படுத்தப்படுகிறான். இப்படி அவமானப்படும் பொழுது யாருக்கும் கோபம்தான் வரும். மேலும் எலிஸபெத் அவனைப் பற்றி சொன்னவை எல்லாம் மிகவும் கசப்பானவை. “அவன் ஒரு சுயநலமி, ஆணவம் பிடித்தவன், மரியாதை தெரியாதவன், தான் திருமணம் செய்து கொள்ளக்கூடிய கடைசி ஆள் இவனாகத்தான் இருக்கும்” என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போகிறாள். கோடீஸ்வரனான டார்சிக்கு, லிஸி சொல்வதெல்லாம் உண்மை என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அவனுக்கு எந்த அளவிற்குப் பக்குவம், sincerity இருக்க வேண்டும்? இந்தக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்வதோடு மட்டுமின்றி இந்தக் குறைபாடுகளிலிருந்து விடுபட்டு அவள் எதிர்பார்க்கும் வகையில் ஒரு நல்ல ஜென்டில்மேனாக மாறவும் முன்வருகிறான். அப்படி அவன் திருவுருமாற எடுத்த முயற்சி உண்மையானது என்பதால்தான் அவனைப் பார்க்கவே பிடிக்காத லிஸி அவன் இருக்குமிடத்திற்குத் தேடி வருகிறாள். நாம் இப்படி நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தக் குற்றச்சாட்டுகள் எதையும் ஏற்காமல் வெறும் தம் பண பலத்தைக் காட்டி லிஸியின் மனத்தைக் கவர முயற்சி செய்திருந்தால்,

அதெல்லாம் பலித்திருக்குமா? பணம்தான் விரயமாகி இருக்குமே தவிர அவன் நினைத்தது எதுவுமே நடந்திருக்காது. இந்த இடத்தில் டார்சியையும், காலின்ஸையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் நமக்கு விஷயமே புரியும். டார்சிக்காவது ஏன் இவள் தன்னை வெறுக்கிறாள் என்ற விவரம் புரிந்தது. புரிந்ததை ஏற்று மனம் மாறுகிறான், அவள் கிடைக்கிறாள். ஆனால் காலின்ஸிற்கோ அவள் ஏன் தன்னை நிராகரிக்கிறாள் என்ற கேள்வியே வரவில்லை. அந்த கேள்வி கேட்கவும் அவன் தயாராகவில்லை. உண்மையைக் கண்டறிந்து மாறவும் அவன் முன்வரவில்லை.

**3. மூன்றாவதாக நான் வலியுறுத்த விரும்புவது perfection ஆகும். அதிலும் அன்னை perfect perfectionஐ விரும்புகிறார்.**

அப்படிப்பட்ட perfectionஐ நாம் detailsகளில் கொண்டு வந்தால், அன்னைக்கது மிகவும் உகந்ததாக இருக்கும். Perfection என்றால் உண்மையில் perfection in details என்றுதான் வரும். முக்கியமான விஷயங்களில் perfectஆக இருக்கிறேன், முக்கியமில்லாத விஷயங்களில் ஏனோதானோ என்றிருக்கிறேன் என்று சொல்வது perfection ஆகாது. ஒருவர் பொய் சொல்லமாட்டார் என்றால், சின்ன விஷயம், பெரிய விஷயம் என்ற இரண்டிலும் பொய்யே சொல்லமாட்டார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். மகாபாரதத்தில் தர்மபுத்திரர் பொய் சொல்லமாட்டார் என்று பெயர் வாங்கியவர் என்றால், உண்மையில் எதற்கும் பொய் சொல்லாமல் இருந்தார். அப்படி அவர் பொய்யை அறவே ஒழித்ததால்தான் அப்படி ஒரு நல்ல பெயர் அவருக்குக் கிடைத்திருக்கிறது. சுத்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒருவர் தம் வீட்டு ஹால் மற்றும் பூஜை அறை என்று நாலு பேர் வந்து போகின்ற இடங்களில் மட்டும் சுத்தமாக வைத்துக் கொண்டு, படுக்கையறை, சமையலறை, குளியலறை, ஸ்டோர் ரூம் என்று இவற்றையெல்லாம் அசுத்தமாக வைத்திருந்தால் அவர் சுத்தமானவர் என்று நாம் ஏற்றுக் கொள்வோமா? நாம் வீட்டில்



எங்கு சென்றாலும் நம் கண்ணில் தூசோ, கறையோ, அழுக்கோ படாமல் எல்லா இடங்களும் யூனிபாமாக பளிச்சென்று இருந்தால்தான் நாம் வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். நாம் இப்படியும் நினைத்துப் பார்க்கலாம். ஓர் அலுவலகத்தில் இருப்பவர்கள் மரியாதையாகப் பழகுவார்கள் என்று சொன்னால் அந்த மரியாதை என்பது கடைநிலை ஊழியர்களிடமிருந்து, தலைமை அதிகாரி வரை வெளிப்பட்டால்தான் அந்த அலுவலகத்தை மரியாதைக்குரிய இடமென்று எடுத்துக் கொள்வார்கள். உயர்மட்ட அதிகாரிகள் மரியாதையாகப் பழகுவார்கள், ஆனால் கீழுள்ளவர்கள் எல்லாம் மரியாதைக் குறைவாகத்தான் பழகுவார்கள் என்றால் அந்த அலுவலகத்தை நாம் மரியாதைக்குரிய அலுவலகம் என்று சொல்லமாட்டோம்.

இதே உண்மையை நாம் பல இடங்களில் பொருத்திப் பார்க்கலாம். ஒரு கம்பனி efficientஆக செயல்படுகிறதென்றால், அந்த efficiency எல்லா இடங்களிலும் வெளிப்பட்டால்தான் அது உண்மையாக இருக்கும். உற்பத்திப் பிரிவில் efficiency இருக்கிறது. ஆனால் அதே efficiency விற்பனை பிரிவிலோ, பொது நிர்வாகத்திலோ, கணக்கு வைப்பதிலோ இல்லை என்றால் அந்தக் கம்பனி அவ்வளவாக பரிமளிக்காது. Steve Jobs அவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொண்டார். ஆப்பிள் கம்ப்யூட்டர்ஸ் கம்பனியுடைய products எல்லாம் கஸ்டமர் கண்ணோட்டத்திலிருந்து எவ்வளவு perfectஆக செய்ய முடியுமோ அவ்வளவு perfectஆக செய்வது என்ற தீர்மானம் பூண்டார். கஸ்டமர் எதிர்பார்க்கும் perfection என்ன என்று தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொண்டார். கஸ்டமர்கள் product அழகாக இருக்க வேண்டும் என்றால் ஓரமெல்லாம் ஸ்கொயராக இல்லாமல் curvedஆக இருந்தால் அந்த அழகு வரும். இந்த அழகைக் கொண்டுவர அவர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். ஆப்பிள் கம்ப்யூட்டருடைய Ipad, Ipod எல்லாமே அவற்றில் அடங்கியுள்ள softwareகளை எடுத்துக்

கொண்டீர்களென்றால் மிகவும் சிக்கலானவைதான். ஆனால் கஸ்டமர் கைக்கு வரும் பொழுது அவை எளிமையாக user friendlyஆக இருக்கும்படி Jobs பொறுப்பேற்றுக் கொண்டார்.

வெளிநாட்டிலுள்ள டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள், பெரிய விமான நிலையங்கள் மற்றும் நூலகங்கள் என்று அந்த இடத்தை எல்லாம் பார்ப்பவர்கள் இவ்விடங்களில் காணப்படும் சுத்தம் மற்றும் நேர்த்தியைக் கண்டு அசந்து போகிறார்கள். நம்முடைய உள்ளூர் நூலகங்களில் ஒரு புத்தகத்தைத் தேடி எடுப்பதென்றால் மிகவும் சிரமமான காரியம். அது முதலில் இருக்க வேண்டிய இடத்தில் இருக்காது. புத்தகத்தைத் தேடிக் கண்டுபிடித்து எடுப்பதற்குள் நமக்கு அளவு கடந்த எரிச்சல் வந்துவிடும். அமெரிக்காவில் லைப்ரரி ஆப் காங்கிரஸை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த ஒரு நூலகத்தில் முப்பது, நாற்பது லட்சம் புத்தகங்களுக்கு மேல் கண்டிப்பாக இருக்கும். ஆனால் அவ்வளவு புத்தகங்கள் இருக்கின்ற இடத்தில் நமக்கு வேண்டிய ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை 5 நிமிடங்களில் எடுத்துவிடலாம் என்றால், அந்த நூலகத்தை எவ்வளவு perfectஆக அவர்கள் வைத்திருப்பார்கள் என்று நமக்குப் புரிகிறது. அம்மாதிரியே ஒரு டிபார்ட்மெண்ட் ஸ்டோர் என்று எடுத்துக் கொண்டால், ஒரு சராசரி டிபார்ட்மெண்ட் ஸ்டோருடைய பரப்பளவு 1 லட்சம் சதுர அடியாவது இருக்கும். அங்கே ஒரு லட்சம் வகையான பொருட்களையும் அடுக்கி வைத்திருப்பார்கள். அத்தனைப் பொருட்களும் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அந்த லட்சம் சதுரடி பரப்பளவும் சுத்தமாக பளிச்சென்று காட்சியளிக்கிறதென்றால் perfectionஐக் கொண்டுவர அவர்கள் எந்த அளவு முயற்சி எடுக்கிறார்கள் என்று நமக்குப் புரிய வேண்டும். இம்மாதிரியே நியூயார்க் விமான நிலையத்தில் நாளொன்றுக்கு 1,60,000 பேர்கள் இறங்குதல், ஏறுதல் போன்ற வேலைகள் நடக்கின்றன. இவ்வளவும் நேரம் தவறாமல் நடக்க வேண்டும், இவ்வளவு பேர் புழங்கும் இடமும் சுத்தமாக இருக்க வேண்டும் என்றால், அந்த விமான நிலைய நிர்வாகிகள் எவ்வளவு பெரிய



முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று நினைத்துப் பாருங்கள்.

Perfection in details என்பதை அன்னை மிகவும் வரவேற்கிறார், வலியுறுத்துகிறார் என்பதில் நமக்கு சந்தேகமே வேண்டாம். பூரண யோகமே இதற்குச் சிறந்த உதாரணமாக இருக்கிறது. இறைவனை நம்முடைய ஆன்மா மட்டுமின்றி அதோடு சேர்ந்து நம்முடைய அறிவு, உணர்வு, உடம்பு என்று எல்லாமுமே இறைவனை நாட வேண்டும் என்று கேட்கிறார். இப்படிப் பூரண ஜீவனும் இறைவனை நாடுவதுகூட அவருக்குத் திருப்தி தரவில்லை. இதையும் தாண்டி நம் உடம்பிலுள்ள ஒவ்வொரு செல்லும் தன் இறையார்வத்தை வெளிப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் சத்திய ஜீவியம் ரெஸ்பான்ஸ் வழங்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இப்படி ஒவ்வொரு செல்லும் இறையார்வத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறாரென்றால் அன்னை perfection in detailsஐ விரும்புகிறார் என்பதற்கு இதைவிட பெரிய நிரூபணமே தேவையில்லை.

**4. அடுத்ததாக நான் வலியுறுத்த விரும்பும் விதிமுறை சவால்களும், நெருக்கடிகளும்தான் மனிதனுடைய திறமையையும், சாதனையையும் மேம்படுத்துகின்றன என்பதாகும்.**

அன்னையை நாம் கருணையுள்ளம் கொண்ட தாயாராக மட்டுமே பார்க்கிறோம். அது அவருடைய ஒரு அம்சம்தான். அவருக்கு வீராங்கனை என்ற மற்றொரு அம்சமும் நிறையவே உண்டு. வாழ்க்கை வழங்கும் challengeகளை அவர் விரும்பி எதிர்கொள்வார். அல்லது தனக்குத் தானே challengeகளை உண்டுபண்ணிக் கொள்வார். அப்படி தனித்தே அவரால் பூரண யோகத்தை உச்ச கட்டத்திற்கு கொண்டு செல்ல முடியும் என்று தெரிந்ததால்தான், பகவான் அவரை 1950லேயே தனியே விட்டுப் பிரிந்தார். அன்னையை அடிக்கடி நேரில் பார்த்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள முடிந்ததால் பல ஆசிரமவாசிகள் சந்தோஷப்பட்டுக் கொண்டார்கள். அப்படி சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த அன்பர்களிடம் ஒரு நாள் அன்னை

அவர்கள் என்னை நேரில் பார்த்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வதில் என்ன challenge இருக்கிறது? ஒன்றுமில்லை. நான் உங்களின் ஜீவனின் ஆழத்திலிருக்கிறேன். அந்த ஆழத்தில் என்னைக் கண்டுபிடித்து அந்த நிலையில் நீங்கள் என்னுடன் உறவாட வேண்டும். அதுதான் எனக்கு சந்தோஷம் கொடுக்கும் என்றார். இப்படி அன்னை சொல்வார் என்று அன்பர்கள் எதிர்பார்த்திருப்பார்களா? அவர் அன்பர்களுக்குப் பொதுவாக வழங்கிய அறிவுரையே என்னவென்றால், எப்பொழுதும் உங்கள் அதிகபட்ச முயற்சியையே நீங்கள் எடுக்க வேண்டும், இது கடினமாக இருந்தாலும் பரவாயில்லை என்கிறார்.

வாழ்க்கையில் இப்படி சோதனைகளையும், challengeகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு முன்னுக்கு வந்த உதாரணங்கள் நிறையவே இருக்கின்றன. இஸ்ரேல் நாடே இதற்கு ஒரு நல்ல உதாரணம். ஐரோப்பிய யூதர்கள் இஸ்ரேலில் குடியேறிய பொழுது அங்கு எந்த வசதியும் இல்லை. பாலைவன சூழல்தான் நிலவியது. அது மட்டுமின்றி சுற்றியுள்ள அரபு மக்களும் அவர்களுடைய வரவை வரவேற்கவில்லை. போருக்கு வந்தார்கள். 1948ஆம் வருடம் இஸ்ரேல் சுதந்திர நாடாக அறிவிக்கப்படும் பொழுது சுற்றியிருந்த எல்லா அரபு நாடுகளும் உடனே போர் தொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. புதிதாக உதயமாகும் ஒரு சிறிய நாட்டை சுற்றியிருக்கும் 5 அல்லது 6 அரபு நாடுகள் உடனே வன்மையாகத் தாக்கும் என்ற ஆபத்தான நிலைமையை நம்மால் எண்ணிப் பார்க்க முடிகிறதா? அந்த நிலைமையில் யாராவது இருக்கப் பிரியப்படுவார்களா? பிடிக்கிறதோ, இல்லையோ அந்த நிலையில்தான் இஸ்ரேல் அன்று இருந்தது. அப்போதிருந்த இஸ்ரேலிய பிரதமர் கோல்டா மேயர் அமெரிக்க யூதர்களிடம் ஆதரவு திரட்டலாம் என்று அமெரிக்கா விரைந்தார். அங்கு நடந்து கொண்டிருந்த யூதர் மாநாடு ஒன்றில் பேச அனுமதி கேட்டார். உங்கள் பிரச்சினையை உங்களோடு வைத்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு இதில் ஆர்வமில்லை என்று நிர்வாகிகள்



மறுத்தார்கள். மீண்டும் காலில் விழாத குறையாகக் கெஞ்சி சிறிது நேரம் பேச வாய்ப்புப் பெற்றார். கிடைத்த அந்த சிறிது நேரத்தில் இஸ்ரேல் இருக்கும் ஆபத்தான நிலைமையைப் பற்றி உருக்கமாக வந்திருப்பவர்கள் மனதைத் தொடும்படி பேசினார். பார்வையாளர்கள் வழங்கிய response கற்பனையையும் மிஞ்சியது. அடுத்த அரை மணி நேரத்தில் லட்சக்கணக்கான டாலர்கள் நிதியுதவியாகக் குவிந்தன. செய்தித்தாள்கள் வாயிலாக விஷயம் காட்டுத்தீ போல் அமெரிக்கா முழுவதும் பரவியது. ஆயுதங்கள் வாங்கவும், போர்க்கால நெருக்கடியை சமாளிக்கவும் 100 மில்லியன் டாலர்கள் குவிந்தன. மேயரும் சந்தோஷமாக நாட்டிற்குத் திரும்பினார். வாழ்வா, சாவா என்ற அந்த அரை மணி நேர challengeஐ அந்த அம்மையார் வெற்றிகரமாக சமாளித்ததால்தான், இஸ்ரேல் இன்னமும் ஒரு நாடாக விளங்குகிறது.

இதைப் போலவே இரண்டாம் உலகப் போர் ஐரோப்பாவில் விளைவித்த சேதம் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அவ்வளவு உயிர் சேதமும், பொருட்சேதமும் விளைவிக்கப்பட்டது. அப்படிப்பட்ட சேதத்திலிருந்து மீண்டு வர ஐரோப்பிய நாடுகள் எடுத்த முயற்சி மிகப்பெரிய முயற்சியாகும். அதே நிலைக்கு இந்தியா, பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகள் தள்ளப்பட்டிருந்தால், மீண்டும் எழுந்திருக்கவே 50 வருடங்களாகும். அமெரிக்க நிதியுதவி கிடைத்தது என்றாலும், அதை முறையாக, திறமையாகப் பயன்படுத்திய ஐரோப்பிய மக்களை நாம் பாராட்டியே ஆக வேண்டும். 1945இல் போர் முடிந்தது. 1955இல், அதாவது 10 ஆண்டுகளில் அந்த நாடுகள் எல்லாம் மீண்டு எழுந்துவிட்டன. இதில் ஆச்சரியம் என்னவென்றால், அமெரிக்காவின் நிதியுதவி வேண்டாமென்று மறுத்த சோவியத் யூனியன் தன்னுடைய சொந்த பலத்தால் மட்டுமே முன்னேறியது. இப்படி ஐரோப்பிய நாடுகள் நிகழ்த்திய முன்னேற்றத்தைக் கண்டு, International Labour Organisation என்ற சர்வதேச அமைப்பு இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் 500 ஆண்டுகளில் அடையக்கூடிய

முன்னேற்றத்தை ஐரோப்பிய நாடுகள் 50 ஆண்டுகளிலேயே சாதித்துக் காட்டியிருக்கின்றன என்று தாராளமாகப் பாராட்டியது.

இன்று உலகம் மீண்டும் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ளது. ஸ்பெயின், இத்தாலி, கிரீஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார நிலை மிகவும் மந்தமாகிவிட்டது. ஸ்பெயின் நாட்டில் 25% மேல் இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலையில் எந்த நாட்டிலும் புரட்சி வெடிக்கும். நெருக்கடியை தீர்த்து மீண்டும் சகஜ நிலைக்கு வருவதற்கு பொருளாதார நிபுணர்களுக்கே வழி தெரியவில்லை. பணம் மற்றும் பொருளாதாரத்தை சமூகத்தின் அங்கமாக சேர்த்து வைத்துப் பார்த்துக் கையாள வேண்டும். இப்படி சேர்த்து வைத்துப் பார்க்காமல் பிரித்துப் பார்த்ததின் விளைவுதான் இன்றைய பொருளாதார நெருக்கடி. ஒரு முழுமையான கண்ணோட்டத்திலிருந்து செயல்பட்டால்தான் இன்றைய உலக பொருளாதார பிரச்சினை தீரும். இன்று உலகம் ஒன்றாகிவிட்டது. அதற்கு நிரூபணமாக உலக அரசாங்கம் ஒன்று எழ வேண்டும். உலகத்துப் பொருளாதார பிரச்சினைக்கு உலகத்து சார்பாக முடிவு எடுக்கப்பட வேண்டும். இப்பொழுது இருக்கின்ற போட்டி மனப்பான்மை நீங்கி தேசங்கள் ஒற்றுமையாக செயல்பட முன்வந்தால் இருக்கின்ற பொருளாதார பிரச்சினைகள் மாயமாக மறையும். ஆகவே உலக அரசாங்கத்தை இனிமேல் தள்ளிப்போட முடியாது என்பதை உலக மக்களுக்கு உரைக்குமாறு உணர்த்தவே இயற்கை இப்படியொரு கடுமையான சோதனையை நமக்கு வழங்கி இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து யுனைட்டெட் நேஷன்ஸ் போன்ற சர்வதேச அமைப்புகள் உடனடியாக உலக அரசாங்கம் அமைப்பதற்குச் செயல்பட்டால் இன்று பெரிய நெருக்கடியாக நம்மை வாட்டிக் கொண்டிருப்பது பெரிய அதிர்ஷ்டமாக மாறும்.

**5. ஐந்தாவதாக அன்னைக்குகந்த விதிமுறையாக நான் எடுத்துப் பேச விரும்புவது, அடுத்தவர் *கண்ணோட்டத்தில் உள்ள உண்மையை* ஏற்பதாகும். அதை அன்னை பெரிதும் வரவேற்கிறார்.**

எவர் ஒருவர் அடுத்தவர் கண்ணோட்டத்திலுள்ள உண்மையை ஏற்க முன்வருகிறாரோ அந்த அளவிற்கு அவருடைய அறிவு சத்திய ஜீவிய விரிவாக்கம் பெறுகிறது என்று என் தந்தையார் சொல்கிறார். கருத்து வேறுபாட்டால் இன்று எவ்வளவோ விஷயங்கள் கெட்டுப் போயிருக்கின்றன. ஆகவே அந்த இடத்தில் கருத்து வேறுபாட்டை விலக்கி, கருத்து ஒற்றுமையைக் கொண்டு வந்தால், அங்கே அன்னையின் அருள் பிரமாதமாக செயல்படும். வாங்குபவர்க்கும் விற்பவர்க்கும் விலை படியாமல் போவதால் பல வருடங்களாக அந்த transaction நடக்காமலிருப்பதுண்டு. மனைவி விரும்பிய ஆசைகளைக் கணவன் பூர்த்தி செய்ய மறுப்பதால், இல்லற வாழ்க்கை பல வருடங்களாகக் கசந்து போகிறது. ஊழியர்களின் கோரிக்கைகளை மேனேஜ்மெண்ட் ஏற்க மறுப்பதால் பல வருடங்களாக கம்பனி லாபகரமாக இயங்காமல் போகிறது. குடிமக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வராத அரசாங்கம் வருடக்கணக்காக மக்களுடைய வெறுப்பிற்கு ஆளாகிறது.

இப்படி இரு எதிர் துருவங்களாக செயல்படுகின்றவர்கள் பரஸ்பரம் மற்றவர் கருத்திலுள்ள உண்மையை ஏற்று செயல்பட்டால் வாழ்க்கை எவ்வளவோ சிறப்பாக இருக்கும். விற்பவன் விலையைக் குறைத்து, வாங்குபவன் சற்று விலையை ஏற்றினால், பல நாள் தடைபட்டு வந்த transaction உடனே முடிந்துவிடும். மனைவி சொந்தமாக வேலை செய்து சம்பாதித்தால் தனக்கு அடங்கமாட்டாள் என்றால், கணவனுக்கு இருக்கின்ற பயத்தை மனைவிமார்கள் எடுத்தால் இல்லற வாழ்வில் அதுவரை இல்லாத சுமுகம் வந்துவிடும். கம்பனியின் வருமானம் உயரும்பொழுது ஊழியர்களின் சம்பளமும் உயர்வதுதான் முறை என்று மேனேஜ்மெண்ட் பெருந்தன்மையாக சம்பளத்தை உயர்த்த முன்வந்தால், அதே சமயத்தில் அதிக சம்பளம்

கொடுக்கின்ற கம்பனிக்கு இன்னும் சிறப்பாக உழைக்க வேண்டும் என்று ஊழியர்களும் முன்வந்தால், கம்பனி தொடர்ந்து லாபகரமாகவே இயங்கிக் கொண்டிருக்கும். இம்மாதிரியே குடிமக்களின் அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் பூர்த்தி செய்ய முன்வரும் பொழுது அரசாங்கத்திற்குத் தேவையான வரிப் பணத்தை மக்களும் ஆர்வமாகக் கொடுக்க முன்வந்தால், இரு பக்கமும் ஒத்துழைப்பு இருக்கும் பொழுது அரசாங்கம் மற்றும் குடிமக்களிடையே உள்ள உறவு என்றென்றும் சுமுகமாகவே இருக்கும்.

கருத்து வேறுபாடு என்பது சிறு அளவில் மட்டுமின்றி பெரிய அளவில் தேசங்களிடையேயும் இருக்கிறது. உதாரணமாக இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கு இடையேயுள்ள பிரச்சினை 60 வருடங்களுக்கு மேலாக இருப்பதைப் பார்க்கிறோம். அம்மாதிரியே காஷ்மீரை ஒட்டி இந்தியா மற்றும் பாகிஸ்தானிடையேயுள்ள பிரச்சினை இன்றளவில் தீர்க்கப்படாததையும் பார்க்கிறோம். யூதர்களுக்கோ பாலஸ்தீனியர்களுக்கோ இருவருக்கும் வாழ பரஸ்பர உரிமையில்லை என்று இரு கட்சியினரும் இத்தனை வருடங்களாக சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இதில் என்னதான் உண்மை இருக்கிறது? இவர்களை விட்டால் இம்மாதிரியே காலம் முழுவதும் பேசிக் கொண்டிருப்பார்கள். பிரச்சினையே தீராது. இதில் ஆன்மீக உண்மையென்ன? அன்னையைப் பொருத்தவரை இஸ்ரேலும் அவர் குழந்தைதான், பாலஸ்தீனமும் அவர் குழந்தைதான். தனக்கு 2 குழந்தைகள் இருந்தால், அந்த 2 குழந்தைகளும் வாழ வேண்டும் என்றுதானே எந்தத் தாயாரும் நினைப்பார்? தெய்வத் தாயாரும் இப்படித்தான் நினைக்கிறார். இப்படி 2 குறுகிய கண்ணோட்டங்களையும் தாண்டி மூன்றாவதாக உள்ள பெரிய கண்ணோட்டத்திற்கு இவர்கள் வந்தார்களென்றால், ஒருவரை மற்றொருவர் வாழ அனுமதித்தால், இத்தனை நாள் பிரச்சினையாக இருந்தது வெகுவிரைவில் சுமுகமான தீர்வாக மாறிவிடும். உலக மக்களின் தேவைகளை எல்லாம் ஆண்டவன் பூர்த்தி செய்வதை நாம்



பார்க்கிறோம். பணம் வேண்டும், வசதி வேண்டும், பிரச்சினைகள் தீர வேண்டும் என்று மக்கள் ஆண்டவனைக் கேட்டவண்ணம் இருக்கிறார்கள். ஆண்டவனும் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். மனிதன் தான் மாறாமல் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கும் வரையிலும் இது one way relationshipஆகத்தான் இருக்கும். இப்படியில்லாமல் அன்னை நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? அவர் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய நாம் என்ன செய்ய வேண்டும்? இப்படி ஆண்டவனுக்கும் ஒரு சொந்த கண்ணோட்டம் உள்ளது என்பதை அன்பர்களாகிய நாம் ஏற்றால் வாழ்க்கை எவ்வளவோ தெய்வீகமயமாகிவிடும். அன்னை "அகந்தையை விட்டொழித்து ஆன்மாவை வெளிக் கொண்டு வா" என்கிறார். "அறிவு, உணர்வு, உடலை நம்பாமல் ஆன்மாவை நம்பு" என்கிறார். பெற்றுக் கொள்வதில் கிடைக்கும் இன்பத்தைவிட self-giving செய்வதில் இன்பம் அதிகம் என்று சொல்கிறார். இப்படி நமக்கென்ன வேண்டும் என்று அதை மட்டும் கேட்பதைத் தவிர்த்து, அன்னையின் திருவுள்ளம் பூர்த்தியாக என்னால் முடிந்ததை நான் செய்கிறேன் என்று செய்ய முன்வந்தால் அன்பர்கள் வாழ்வு அடையாளமே தெரியாத அளவிற்கு ஆனந்தமயமாகிவிடும்.

6. **ஆறாவதாக நான் வலியுறுத்த விரும்பும் விதிமுறை என்னவென்றால் Infiniteஆக இருப்பதுதான் நம்மிடையே finiteஆக காட்சியளிக்கிறது.**

*Finite, Infiniteஆக மாற்றும் இரகசியம் தெரிந்தவர்களுக்கு அவர்களுடைய சாதனைக்கு அளவே இல்லை.* இன்று ஒரு microchipஇல் எண்ணற்ற புத்தகங்களை அடக்கலாம் என நாம் பார்க்கிறோம். அணுவை பிளந்தால், அவ்வளவு பிரம்மாண்டமான எனர்ஜி வெளிப்படுகிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதா? ஜப்பான் தேசம் பரப்பளவிலும் சரி, ஜனத்தொகையிலும் சரி, சிறிய நாடாகத்தான் கருதப்படும். ஆனால் அதன் GDPஐப்

பார்த்தோம் என்றால், உலகப் பொருளாதாரத்தில் அது 2ஆம் இடத்தில் இருக்கிறது. சைனாவில் Shanghai என்றொரு சிட்டியுள்ளது. அந்த ஒரு சிட்டி ஒரு வருடத்திற்குச் செய்யும் ஏற்றுமதி இந்தியா முழுவதும் செய்யும் ஏற்றுமதியைவிட அதிகம் என்று சொல்லப்படுகிறது. விரிந்து பரந்து கிடக்கும் வானில் உள்ள எல்லா நட்சத்திரங்களையும் நாம் ஒரே ஒரு டெலஸ்கோப் மூலமாகவே பார்க்கலாம். சிறிய நாடான இஸ்ரேலில் ஒரு ஏக்கரில் இந்தியாவைவிட அதிகமாக ஆரஞ்சு பழங்களை விளைவித்துக் காட்டுகிறார்கள். பல பெரிய அமெரிக்கன் கார்ப்பரேஷன்கள் பல சிறிய நாடுகளைவிட பெரிய பட்ஜெட்டைக் கொண்டுள்ளன. மேலும் உலகத்துக்கே தேவையான consumer goodsஐ ஒரு அமெரிக்கக் கம்பனியே சப்ளை செய்யக்கூடிய வல்லமை கொண்டுள்ளது என்றும் சொல்கிறார்கள். உலகம் தோன்றிய நாளிலிருந்து ஆட்சி செய்து வந்த எமதர்மராஜாவை சாவித்ரி மூன்றே நிமிடங்களில் கரைத்துத் திருவுருமாற்றம் செய்து விடுகிறாள். ஆப்பிள் கம்ப்யூட்டர்ஸ் அண்மையில் வெளியிட்ட ஒரு Ipad model ஒரே நாளில் ஒரு பில்லியன் டாலர்கள் அளவிற்கு ஆர்டர்களை உண்டு பண்ணியது. ஆங்கிலத்தில் மொத்தம் 26 எழுத்துகள்தான் உள்ளன. ஆனால் அந்த 26 எழுத்துகளும் சேர்த்துக் கோடிக்கணக்கான புத்தகங்களை வெளிக்கொண்டு வந்துள்ளன. ரோமாபுரி நகரம் ரோம சாம்ராஜ்ஜியத்தையே நிறுவியது. சிறிய தீவு நாடான இங்கிலாந்து உலகமெங்கும் பெரிய சாம்ராஜ்ஜியங்களை நிறுவியது. காந்திஜி அவர்கள் ஒரு தனிமனிதர். அவருடைய வார்த்தைக்கு இந்தியா முழுவதுமே கட்டுப்பட்டு நின்றது. இம்மாதிரியே ஸ்டாலின் என்ற ஒரு சர்வாதிகாரிக்கு சோவியத் யூனியனே 20 வருடங்களுக்கு மேலாக அடிபணிந்து இருந்தது.

Finiteஆகக் காட்சியளித்தது எப்படி Infiniteஆக மாறுகிறது என்ற கேள்வி எழுகிறது. அதற்கு நாம் சொல்லும் பதில் என்னவென்றால் அதை நாம் perfectஆக கையாண்டோமானால் அது தன் finite தன்மையை இழந்து Infinite தன்மையை



வெளிப்படுத்துகிறது. நாம் microchip என்று சொல்வது வெறும் மணல்தான். அதன் chemical பெயர் silicon dioxide. இருந்தாலும் வெறும் மணலாக காட்சியளிப்பதை microchipஆக மாற்றும் இரகசியம் தெரிந்தால், வெறும் மணலுக்கு இலட்சம் மடங்கு ஆற்றல் அதிகரிக்கிறது. இம்மாதிரியே ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தில் வெடித்த அணு குண்டில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருள் வெறும் 50 மில்லிகிராம் யுரேனியம்தான். எப்படி வெறும் 50 மில்லிகிராம் யுரேனியம் அவ்வளவு பெரியதாக வெடித்தது என்று கேட்டால் அது சாதாரண யுரேனியமே இல்லை. நியூக்லியர் செயின் ரியாக்ஷனை நிகழ்த்தக்கூடிய யுரேனியமாக மாற்றியிருக்கிறார்கள். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்த பிறகு அதற்கு இவ்வளவு பெரிய பிரம்மாண்டமான சக்தி வருகிறது. ரோமாபுரி என்ற ஒரு நகரம் எப்படி ரோம சாம்ராஜ்ஜியத்தை நிறுவியது என்று கேட்டால் ரோம் நகரத்துத் தலைவர்கள் சட்ட நிபுணர்களாக விளங்கினார்கள். சட்டங்களுக்கு முக்கியத்துவம் இல்லாத நாட்களில் சாம்ராஜ்ஜியம் நிறுவியவர்கள் எண்ணற்ற சட்டங்களை இயக்கி அமல்படுத்தியதால் ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தையே அவர்களால் கட்டிக்காக்க முடிந்தது. எப்படி Steve Jobs தன்னுடைய 23ஆம் வயதிலேயே 300 மில்லியன் டாலர்கள் சம்பாதித்தார் என்று கேட்டால், யாரிடமும் இல்லாத ஒரு பெரிய individuality அவரிடமிருந்தது. கஸ்டமர்களை எல்லா வகையிலுமே மகிழ்விக்கக்கூடிய ஒரு பொருளைத்தான் உருவாக்க வேண்டும் என்ற வெறி தன்னுடைய நோக்கத்தில் வெற்றி கண்டு, அவ்வளவு பெரிய வருமானத்தை அந்த சிறு வயதிலேயே அவருக்குத் தேடித் தந்தது. Perfectஆக இருக்கின்ற ஒரு மனிதன் உலகத்தையே காப்பாற்றலாம் என்று பகவான் சொல்லியிருக்கிறார் என்றால் அங்கே நாம் சிந்திக்க வேண்டும். ஒரு மகானுடைய ஆத்மா உலகத்தைவிடப் பெரியது என நாம் ஏற்க வேண்டும். அதனால்தான் அந்த ஆத்மாவிற்கு இறைவன் அளிக்கும் பரிசு அவருக்கு மட்டும் கிடைக்காமல், இந்த உலகத்திற்கே கிடைக்கிறது. Perfectஆக

இருக்கும் ஆத்மா விழித்துக் கொள்ளும் பொழுது அது subliminal levelஇல் அகில உலகத்துடன் ஒன்றிவிடுகிறது. இப்படி உலகத்துடன் ஒன்றிப் போவதால் அதற்கு ஒரு நல்லது நடந்தால் அது அந்த உலகம் முழுவதற்கும் நல்லதாகக் கிடைக்குமாறு மாறுகிறது. மழை என்று பெய்தால் நம் நிலத்திற்கு மட்டும் பெய்யுமா? ஊர் முழுக்கத்தானே பெய்யும்? அன்பர் அனுபவத்தில் இதை நாம் நிறையவே பார்த்திருக்கிறோம். தன் வருமானம் உயர வேண்டும் என்று அன்பர் பிரார்த்தனை செய்யும் பொழுது அவர் gradeஇல் உள்ள அத்தனை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வருவதைப் பார்க்கிறோம். ஒரு அன்பர் வீடு கட்ட குறைந்த வட்டியில் கடன் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தால், அது போன்ற ஆசை கொண்ட எண்ணற்ற குடிமக்களுக்குப் பயன் தரும் வகையில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கியில் புதிய சலுகைத் திட்டங்களை அறிவிப்பதைப் பார்க்கிறோம்.

இந்த இடத்தில் நாம் அன்னை சொல்கின்ற ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். சத்திய ஜீவிய திருவுருமாற்றத்திற்கான இரகசிய சாவி நம் உடம்பிலுள்ள தனிப்பட்ட செல்களின் இறையார்வத்தை தூண்டுவதில் இருக்கிறது என்கிறார். கண்ணுக்கே தெரியாத நுண்ணிய செல்களின் இறையார்வம் தூண்டப்பட்டுவிட்டதென்றால் அதற்கு ரெஸ்பான்ஸாக சத்திய ஜீவியமே இறங்கி வருமென்கிறார். Finite திருவுருமாறினால் Infiniteஐயும் அசைக்கவல்லது என்பதற்கு இதைவிட சிறந்த வேறு நிரூபணமே இல்லை.

அன்னை வழியில் சாதிப்பது என்பதைப் பற்றி இதுவரை ஆறு விதிமுறைகளைப் பற்றி பேசியிருக்கிறேன். இவற்றின் ஒட்டுமொத்த சாரமாவது, அளவு கடந்து சாதிக்க வேண்டுமென்றால் அளவு கடந்து அன்னையின் திருவுள்ளத்திற்கேற்ற பாத்திரமாக நாம் மாற வேண்டும். அப்படி மாறும்பட்சத்தில் வாழ்க்கை தினமும் அற்புதமாக மலர்வதைப் பார்க்கலாம்.

*முற்றும்*

❋❋❋



# பெண்ணின் பெருமை

கர்மயோகி

தூய்மை என்பது இறைவனை மட்டும் நம்பி வாழ்வது என்பது அன்னை விளக்கம். இறைவனை சச்சிதானந்தம், புருஷன், ஈஸ்வரன் என அழைக்கிறோம். புருஷனை நம்புவது பிரக்ருதி, ஈஸ்வரனை அடுத்து செயல்படுவது சக்தி. ஆங்கிலத்தில் husband கணவன் என்ற சொல் பொருள் ஈட்டுபவன் எனவும், wife என்பது woman பெண் எனவுமாகும். தமிழில் புருஷன் என்பது ஆன்மீக அடிப்படையில் இறைவனாகும். பத்தினி, பாரியாள், மனைவி, இல்லக் கிழத்தி, சம்சாரம் என்ற சொற்கள் ஆன்மீக அடிப்படையில் கற்புடைய பெண்ணையும், குடும்ப பாரத்தை ஏற்ற பாரியாள் எனவும், மனைக்குரிய பெண்ணாகவும், இல்லத்தை இருப்பிடமாகக் கொண்டவள் எனவும் கூறும்.

பெண்மையின் முதல் அம்சம் தாய்மை. தாய்மை சுயநலமே அறியாத பரநலனுக்குரிய ஜீவனாகும். **பெண்ணின் உடலமைப்பு பக்தியின் சின்னம் என்று பகவான் கூறுகிறார்**. மனிதனைப் படைக்க ஆண்டவன் முனைந்த பொழுது அதற்குரிய உருவம் அவனுக்குப் புலப்படவில்லை. பல கடவுள்கள் பல ரூபங்களைக் கொடுத்தவற்றை ஆண்டவன் நிராகரித்துவிட்டான். குரங்கு மனிதனாகப் பரிணாம வளர்ச்சி பெற்றது என்ற கொள்கை முழுவதுமாக நிரூபணமாகவில்லை என பகவான், ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு (species) பரிணாமம் உயரும் பொழுது கம்பளிப் பூச்சியின் கூடு போன்ற இடைப்பட்ட நிலையுண்டு. அது நம் கண்ணுக்குத் தெரியாத சூட்சும ரூபம் என்கிறார். அது டார்வினால் புறக்கணிக்கப்படுவதால் பகவான், டார்வின் கொள்கையை முழுவதுமாக ஏற்பதில்லை. கடவுள்கள் கொடுத்த பல்வேறு ரூபங்களில் இன்று நாம் தாங்கும் உடலின் ரூபம் இறைவன் ஏற்றது. **அந்த**

**ரூபம் பக்தியால் பழுத்து நிறைவு பெற்ற ரூபம் பெண்ணின் உடல் என்று பகவான் எழுதுகிறார்**. திருவள்ளுவர் பெண்ணின் பெருமையைப் பலவாறும் கூறுகிறார். பெண்களில் வாயில் ஊறும் நீர் எந்த நேரமும் இனிமையாக இருக்கும் என்று ஒரு கருத்து. அக்கருத்தை ஆமோதிப்பது போன்றது வள்ளுவர் சொல்: வாலெயில் ஊறும் நீர்.

காலையில் எழுந்தவுடன் முதற்காரியமாக நாம் செய்வது பல் துலக்கிக் குளிப்பது. பல் துலக்கியபின் வாய் தூய்மை பெறும். இடைவிடாத தியானத்தை மேற்கொள்ளும் காலங்களில் தூங்கி எழுந்தால் தியானம் கலைந்தது போலிருக்கும். அப்பொழுது பல் துலக்குமுன், வாய் தூய்மை பெறுவதைக் கவனித்தால் துலக்கிய பின்னிருப்பது போல் தெரியும். தியானத்தில் ஊறிய உடல் வாயைப் பல் துலக்கிய பின் உள்ள தூய்மைக்குக் கொண்டு வருகிறது. **பிறப்பில் பெண்ணிற்கு அத்தூய்மையுண்டு**. பெண்கள் வாசனைத் திரவியங்கள், மணமுள்ள சோப்பு, பவுடர்களை விரும்புவார்கள், அதிகமாகப் பயன்படுத்துவார்கள். பெண்ணின் பருவத்தில் மனம் நிறையும் சந்தர்ப்பங்கள் எழுவதுண்டு. அது வாழ்வில் பலருக்கும் பூர்த்தியாகும். உள்ளும், புறமும் நிறைவு நெகிழ்வு பெறும் பருவமிது. அந்நிலையில் பொதுவாக சிறந்த பெண்களுக்கு உடல் சுகந்தத்தால் சூழப்படும். இது கவர்ச்சி தராது, பக்தியை எழுப்பும். தேவி உபாசகர்கட்கு தெய்வம் பெண், பெண் தெய்வம், அவள் பாதம் பாதமலர், அதை நெஞ்சில் வைத்துப் பூஜிப்பது அவர்கள் வழிபாடு. அதுபோன்ற பக்தருக்கு அமைந்த மனைவி அவருக்கு வழிபடும் தெய்வமாக அமையும். **அவரைப் பொருத்தவரை தேவியை பூஜிப்பதும், மனைவியை ஆழ்ந்த உணர்வில் பிரதிஷ்டை செய்வதும் ஒன்றே**. அதுபோன்ற கணவன் இயல்பாக இனிமையாக இருக்கும் நேரம் மனைவி, தன்னை ஸ்தோத்திரம் செய்வதாகக் கூச்சப்பட்டு, அச்சப்படுவாள், சொல்வதும் உண்டு. “பையல் என்ற பொழுதே பரிந்தெடுத்தாள் தாய்” எனக் கூறும் பட்டினத்தாரும் பெண்மையின்



இப்பெருமையை உணர்ந்த முனிவர். இந்திய மரபில் குழந்தை தெய்வம். அதேபோல் நம் கலாச்சார சூழலில் பெண் வழிபாட்டுக்குரியவள், தெய்வ அம்சம் படைத்தவள். அவள் மாங்கல்யம் கணவன் உயிருக்குக் கவசம், அவள் ஆழ்ந்து நினைப்பது பூர்த்தியாகாமல் போவதில்லை, ஆவது பெண்ணால் என்பன நம் தமிழ் மரபு.

இயற்கையாகப் பெண்ணின் குரல் இனிமையானது. ஆன்மீக விளக்கப்படி அன்பு சத்தியத்துடன் கலந்தால் எழுவது இனிமை. குரல் உயிரை வெளிப்படுத்துவது, அது பிராணன். பெண் குரல் இனிமையானது என்பது **பெண்ணின் உயிரில் இயல்பாக அன்பும் சத்தியமும் இணைந்துள்ளதற்கு அடையாளம்**. மனிதன் சுயநலம். சேவை பரநலம். தாய்மையால் பரநலம் - குழந்தையைப் பேணுவது - இயற்கையாகப் பெண்ணிற்கு அமைந்துள்ளது. குடும்ப வாழ்வும், மண வாழ்வும் பெண்ணிற்கு பிறர்க்குத் தன்னை அர்ப்பணிக்குமாறு இயற்கையிலும், சமூகத்திலும் ஏற்பட்டுள்ளது. பெண் மென்மைக்குரியவள். **மென்மை வளமையின் இனிமை**. இனிமையை இதமாக செயல்படுத்தும் வலுவான இதயத்திற்குரியது மென்மை. மென்மை அச்சத்திற்கோ, பலஹீனத்திற்கோ உரியதில்லை; வலிமையின் திண்மை. ஆன்மீக சாந்தி மௌனத்தைப் பெறுவதால் மென்மையாகிறது.

வீடு ஆணுக்கும், குடும்பம் பெண்ணுக்குமுரியது. பொருள் ஈட்டுவது ஆண். பெற்ற பொருளை பொறுப்புடன், கடமையுடன், பண்பாக, உரிய செயலுக்குப் பயன்படும்படிச் செய்வது பெண். திறமை குறைவானால் பெரும் பொருள் வீணாகும். பொறுப்பில்லாவிட்டால் உரியவர்க்குக் கிடைக்க வேண்டியது உரிமையற்றவரிடம் சென்றடையும். கடமை தவறினால் காலம் காட்டி உறுத்தும். பண்பு குறைந்தால் பெரும் செலவில் சிறு காரியம் அரைகுறையாக முடியும். இவை பெண்ணுக்கு அமைந்தது. இதைச் சாதிக்க அவளுக்கு

செயலிலும், சொல்லிலும், உணர்விலும் கட்டுப்பாடுத் தேவை. **கட்டுப்பாடு உயர்ந்தால் கடமை சிறக்கும், மிளிரும்**. கட்டுப்பாடு குறைந்தால், கட்டுத்தறியிலிருந்து விடுபட்ட மாடாகும் குடும்ப வாழ்வு.

பரம்பரை பரம்பரையாய் செல்வமும், அன்பும் பண்பாகப் பரிமாறப்பட்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் எங்கள் வீட்டில் சண்டை, சச்சரவை அறியேன். நாங்கள் குழந்தைகளாய் வளர்ந்த காலத்தில் பெற்றோர் எங்களை அடித்தது, திட்டியதில்லை. நாங்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ்ந்தோம். அதுபோலவே வளர்ந்தோம் என்பார்கள். அவர்கள் உடன் பயின்றவர் அனைவரும் சிறு உத்தியோகம் பெற்று, அதைப் பெரிதாகப் போற்றும் பொழுது இக்குழந்தைகள் ஆரம்பத்திலிருந்தே பெரிய உத்தியோகங்களைப் பெறுவார். வாழ்வில் அசந்தர்ப்பம், விபத்து இயல்பு. இதுபோல் வளர்ந்த குழந்தைகள் வாழ்வில் அவை அரிதாகும்; இல்லையென்பதே அனுபவமாகும். **இலட்சியம் இக்குழந்தைகட்குண்டான இயல்பு**. இலட்சிய இயக்கங்களை நாடிச் சென்று சேவை செய்வார்கள். இவையனைத்திற்கும் அடிப்படை பண்பான குடும்பமும் பக்குவமான பெண்களால் நடத்தப்பட்டதாகும்.

உலக சரித்திரத்தில் இதுவரையில்லாதவை அசோக சக்ரவர்த்தி படையெடுப்பைக் கைவிட்டது; மகாத்மா காந்திஜீ தான் நிறுவிய இயக்கம் அரசியல் பலன் பெற்றபொழுது தனக்கேயுரிய தலைமைப் பதவியை விரும்பி நேருவுக்களித்தது; பெண், அதுவும் இந்தியப் பெண்ணின் பண்பின் நோக்கம் அதுபோன்றது ஆகும். தான் நடத்தும் குடும்பத்தில் எழும் வாழ்க்கை வசதிகளை பிறருக்கு மட்டும் கொடுத்து, கொடுப்பதில் இன்பமுறுவது அப்பண்பு. இதைச் சாதிப்பது பொறுமை. அனந்தமாக பிரம்மம் அசைவற்றிருப்பதை ஸ்தாணு, சாந்தி, அமைதி என்பர். ஆன்மீக அமைதி மனித மனநிலையில் பொறுமையாகும். பூமியாளும் திறனைப் பெற்றது பொறுமை. பொறுமையின் பெருமையை அறிய பொறுமையற்றவரை நினைத்தால்



புரியும். **நாம் பொறுமையிழந்த நேரங்களுண்டு. அந்நேரம் நாம் பொறுமையைக் கருதினால், அதன் பெருமை விளங்கும்**. பெரிய காரியங்களில் பொறுமை முடியலாம். சிறிய காரியங்களில் பொறுமை சிரமம். ஒரு நாளைக்குப் பல முறை பல வழிகளில் பொறுமையை இழக்க நிர்ப்பந்தம் எழுவது குடும்ப நிர்வாகம். பொறுமையின்றி குடும்பமில்லை. பொறுமையாக வாழ்ந்து வளர்ந்த பெண்ணுக்குத் தான் பொறுமையுடையவள் எனத் தெரியாமலேயே இருப்பதுண்டு. நம்மிடம் நிறைந்துள்ள பெரிய நல்ல குணமிருப்பதே நாமறியாவிட்டால் அதுவே அதைப் பெற்றதற்குரிய இலட்சணம்.

சுதந்திரம் வருமுன் மக்கள் நிலை அவலமானது. அதிலும் பெண் நிலை மோசம். அவளுக்குத் திருமணமே தொழிலாக அமைந்தது. பெண்ணுக்குப் படிப்பு, தொழில் அன்று சொற்பம். தகப்பனார், கணவன், மகன் ஆதரவிலேயே வாழும் நிலை அவளுடையது. அக்காலத்தில் வறுமை அதிகம். குடும்பத்தில் மூல புருஷன் இறந்துவிட்டால் குடும்பம் தெருவுக்கு வரும். அதிகமாகப் பாதிக்கப்படுபவள் பெண். படிப்பும், வேலையும் அதிகரித்துள்ள இன்று இந்த அவலநிலை அளவு கடந்து குறைந்துள்ளது. ஒரு ஜில்லா, தலைநகரில் உள்ள பெரிய உத்தியோகஸ்தர்கள் 500 பேரில் முன் தலைமுறையில் கோயில் பூசாரி, கிராம கணக்குப்பிள்ளை, சர்க்கார் குமாஸ்தா, வக்கீல் குமாஸ்தா, ஜவுளிக்கடை கணக்குப்பிள்ளை ஆகியோரின் புதல்வர்கள் 400 பேருக்கு மேல். **இந்த சாதனையின் முக்கிய பகுதி, பெரும் பகுதி, அக்குடும்பப் பெண்களைச் சாரும்**. கடைநிலையிலிருந்த குடும்பத்தை மத்தியதரவர்க்கக் குடும்பமாக அடுத்த தலைமுறையில் செய்தவர் பெண். சீனுவாச இராமானுஜம் தகப்பனார் ரூ.20/- சம்பளம் பெற்ற ஜவுளிக்கடை குமாஸ்தா.

இன்று நிலை சமூகத்தில் உயர்ந்து மாறியுள்ளது. அதே குடும்பப் பெண்கள் தங்கள் ஆத்மீகப் பெருமுயற்சியால் மக்களை அடுத்த தலைமுறையில் இன்று டாக்டர், இன்ஜினீயராகவும், அமெரிக்காவில்

வேலை செய்பவனாகவும் மாற்றியுள்ளனர். அன்று சமூகம் ஏழ்மையானது. இன்றைய சமூகம் ஏழ்மையினின்று விடுபடும் ஆர்வமுள்ள முன்னேற்ற நோக்கமுடையது. மாறிய நிலையில் பெண் சாதனை மகத்தானது. அனுசுயா திருமூர்த்திகளைக் குழந்தையாக்கினாள். நெறியான பெண்கள் முறையாகக் குடும்பம் நடத்தி மோட்சம் பெற்றனர். இந்து சமூகத்தில் இதுவே அதிகபட்ச இலட்சியம். ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன் இந்தியா பெற்ற இந்த இலட்சியத்தை மேல்நாடுகள் இதுவரை எட்டவில்லை. அவர்கள் வாழ்க்கை வசதி பெரியது, ஆன்மீக நிலை அளவு கடந்து தாழ்ந்தது.

பெண்ணுக்குச் சொத்துரிமையில்லை, ஊதியம் தரும் தொழிலில்லை, அறிவு தரும் படிப்பில்லை. **உரிமை எனக் கூறும் எதுவும் அவளுக்கில்லை**. அவளுக்குச் சிரமம் என எழுந்தால் கணவனையே நாட வேண்டும். கணவனே பிரச்சினையானாலும், கணவன் அவள் பிரச்சினையைக் காது கொடுத்துக் கேட்கவில்லை என்றாலும், அவள் நிலையென்ன? எதை நாட முடியும்? அவள் எரிச்சல்பட்டால் உள்ளதும் போகும். எரிச்சல்படும் உரிமையுமில்லை. இந்த நிலையில் அவள் "தெய்வமிருக்குதடி தங்கமே தங்கம்" என்ற மனநிலையைப் பெறுகிறாள். இது அவல நிலை. அது அவளுக்குத் தெய்வ நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. **அது பெரிய நம்பிக்கை. அதனால் அவளால் குடும்பத்திற்கு அளவு கடந்து சாதிக்க முடிகிறது**. அமெரிக்க கம்பனிகள் 100 ஆண்டுகளுக்கு முன் வாடிக்கைக்காரரைத் திருப்தி செய்வது அவசியம் என அறிந்து அதனால் அமெரிக்க கம்பனிகள் உலகெங்கும் பெரும் அளவில் வளர்ந்து பெருகின. பெண் அவள் நிலையால் குடும்பத்தினர் திருப்திப்பட உழைத்தாள். அதனால் அவள் குடும்பம் அந்த அவல நிலையிலும் அளவு கடந்து உயர்ந்தது. இன்று சமூகம் வளர்ந்து, ஏழ்மை குறைந்து, உரிமை பெருகும் நேரம். அன்பர்கட்கு அன்னை சூழல் ஆதரவு தரும் நேரம். இது போன்ற கிடைத்தற்கரிய வாய்ப்புகள் சமூகத்திலும், ஆன்மீகத்திலும் எழுந்துள்ளன. 20 ஆண்டிற்கு முன் ரூ.18,000/-த்திற்கு வாங்கிய



மனை 5 இலட்சம் விலை போகும் நாளிது. அந்த அளவில் வாழ்வில் எல்லா துறைகளிலும் வாய்ப்பை எதிர்கொள்ளும் சூழலிது. இன்று பெண்கள் வாய்ப்பை அறிந்து, அன்னையை ஏற்று குடும்பத்தை வளர்த்தால், சர்க்கார் குமாஸ்தாவான மனிதர் இன்று தொழிலதிபராக முடியும். இந்த சந்தர்ப்பத்தை அநேகர் அறிவதில்லை. இது இன்றைய பெண்கள், அன்பரான பெண்கள் அவசியம் அறிய வேண்டியது.

பெண்களுக்கு சமயோசிதம் உண்டு. Intuition தானே யோசனை செய்யாமல் அறியும் அறிவும் பெண்கட்கு உண்டு. இவற்றை நல்ல முறையில், உயர்ந்த அளவில் பயன்படுத்தும் எந்த அன்பரான பெண்ணும் தம் மக்களை தொழிலதிபர்களாகவும், கோடீஸ்வரர்களாகவும் மாற்றும் வாய்ப்பு அபரிமிதமாக உள்ளது. இவற்றை அவர் கருத வேண்டும்.

பெண் கவர்ச்சியின் உறைவிடம். அது அவள் பிறப்புரிமை. அழகுக் கவர்ச்சியை அனைவரும் அறிவர். **பண்பின் கவர்ச்சி பல மடங்கு பெரியது**. உடை, அதன் வண்ணம் கவர்ச்சிக்காக ஏற்பட்டது என பகவான் குறிப்பிடுகிறார். எழுத்தாளர் கு.ப. ராஜகோபால் 1940இல் எழுதிய கதையில் இக்கருத்து சிறப்பாக வெளியாகிறது. கதை பூர்த்தியாகவில்லை. வேரோட்டம் எனப் பெயர் பெற்றது.

பிரசிடென்சி கல்லூரியில் பயிலும் மாணவன் சந்திரசேகரன் நிதானமும், நாணயமும் நிறைந்தவன், கண்ணியமானவன், பெண்களோடு எல்லா மாணவர்களும் சகஜமாகப் பழகும் பொழுது அதை நாடாதவன். லலிதா என்ற பெண் அழகும், அறிவும் பெற்றதுடன் அமைதியான பெருந்தன்மையுடையவள் என்பதால் கல்லூரியில் மாணவிகளிடம் ராணி எனப் பெயர் வாங்கியவள். எந்த மாணவனுக்கும் தன் மனத்தில் இடம் தராதவள். அவளுக்கு சந்திரசேகரனுடன் பழக விருப்பம். அவன் அவளுடன் பழகுவதற்கு ஏற்படும் சந்தர்ப்பங்களை வலிய தவிர்க்கிறான். அவளே முனைந்து அவனுடன் பழகினாள். அவளை ஏற்றுக் கொண்டு, ஹாஸ்டலை

விட்டு வெளியேறி ஆர்வமாக அவளுடன் தனிக்குடித்தனம் அமைப்பது ஒரு புரட்சியாகிறது. தகப்பனாருக்கு என்ன பதில் கூறுவது, எப்படி அவரை சந்திப்பது, அவர் "முகத்தில் விழிக்காதே" என்றால் என் செய்வது என்ற கேள்விகள் எழுவதை மீறி சந்திரசேகரனை குடித்தனம் ஏற்பாடு செய்ய வைத்தது, அவர் காதிற்கு எட்டி, கிராமத்திலிருந்து எள்ளும் கொள்ளும் வெடிப்பதாக வருகிறார். அவர் வரும் நேரம் அவன் கடைத்தெருவுக்குப் போயிருக்கிறான். லலிதா அவரைப் புரிந்து கொண்டு அமைதியாக மௌனமாக வரவேற்கிறாள். அவளை ஏறெடுத்துப் பார்க்காமல் பேசுகிறார். அவள் குரலினிமை அவரை ஆட்கொண்டது. சிரமப்பட்டு நிமிர்ந்து பார்க்கிறார். சாட்ஷாத் அம்மணியாகக் காண்கிறார். வந்த வேகம் தணிகிறது. குழந்தை என்கிறார், காபி சாப்பிடுகிறார். கணத்தில் அவர் தன்னையிழந்து மகனை அவளுக்காக ஏற்கிறார். நான்கு நாட்கள் தங்கி அனைத்தையும் ஆமோதித்துப் பாராட்டுகிறார். வீடு போய் லலிதா எனக் கதவைத் தட்டுகிறார்.

*அவள் பெண்மையின் முழுமை தூய்மையின்*
*வலிமையாகி அவரை கணத்தில் ஆட்கொண்டது.*

இது பெண்மையின் உச்சகட்டம். இந்த உயர்ந்த அம்சமில்லாத பெண்ணில்லை. இப்படிப்பட்ட பெண் தன் மக்களை உத்தமனாக வளர்ப்பாள். இவள் நாட்டிற்குச் சொத்து.

***பெண்மை மனிதத் தன்மையின் சிறந்த பகுதி.***

*தொடரும்.....*

❁❁❁

**ஜீவிய மணி**

***ஒரு படி உயராமல் சமர்ப்பணமில்லை.***



# Sri Aurobindo and the Tradition

## ஸ்ரீ அரவிந்தரும், மரபும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

### CHAPTER 2 – THE MATERIALIST DENIAL:

71. Tradition permits the insistent denial of the materialist along with the perilous refusal of the ascetic.
**Sri Aurobindo shows behind Agnosticism the admission of the Unkonwable.**
பொருள் முதல்வாதியின் விடாப்பிடி மறுப்பையும், துறவியின் அபாயகரமான மறுப்பையும், மரபு அனுமதிக்கிறது.
**இறைவனை ஏற்பதில் உறுதியான நிலைப்பாடின்மையின் பின்னணியில் அறிய முடியாதது இருக்க முடியும் என்ற நிலைப்பாடிருப்பதை ஸ்ரீ அரவிந்தர் காட்டுகிறார்.**

72. The premise behind the tradition is arbitrary and pronounces its own sentence of insufficiency.
**Sri Aurobindo is ready for a large statement and an ever-developing inquiry.**
மரபின் காற்று பின்னணி காரண அடிப்படையற்றது. அது தன்னிறைவின்மையை அறிவிக்கிறது.
**ஸ்ரீ அரவிந்தர் பேருண்மைகளையும் வளரும் ஆராய்ச்சியையும் ஏற்கத் தயாராக இருக்கிறார்.**

73. The methods of Nature are perfect for evolution but rash and premature for Reason.
**Sri Aurobindo seeks a wider foundation for the higher knowledge – Brahmavidya.**
இயற்கையின் வழிகள் பரிணாமத்திற்குப் பொருத்தமானவை

தான் என்றாலும் தர்க்க முதிர்ச்சியற்றவையாகவும் பொருத்தமற்ற வேகமுடையவையாகவும் உள்ளன.

**பிரம்ம வித்தையாகிய உயர் ஞானத்திற்கான பரந்த அடிப்படையை ஸ்ரீ அரவிந்தர் நாடுகிறார்.**

74. The traditional method leads to a half-truth and a reckless, presumptuous aberration.

**Sri Aurobindo seeks a kind of knowledge which reveals That itself.**

பாதி உண்மைக்கு, முன்யோசனையற்ற அர்த்தமற்ற தன்னம்பிக்கை கலந்த தவற்றுக்கு மரபு இட்டுச் செல்கிறது.

**இறைவனை வெளிப்படுத்தும் ஞானத்தை ஸ்ரீ அரவிந்தர் நாடுகிறார்.**

75. Tradition chooses ignorance and persists in our first limitations.

**Sri Aurobindo wants us to realise the secret capacities of Matter and save that very knowledge will lead us to total fulfillment.**

மரபு அறியாமையை தேர்ந்தெடுத்து, நம் அளவுடைமைகளை ஆராய்கிறது.

**ஸ்ரீ அரவிந்தர் ஜடத்தின் ரகசியத் திறன்களை நாம் கண்டறிய வேண்டுமென விரும்புகிறார். ஞானம் நம்மை முழு நிறைவிற்கு இட்டுச் செல்லுமென்று கூறுகிறார்.**

*தொடரும்....*

❋❋❋

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# திண்டுக்கல் தியான மையம்

- எவருக்கும் இல்லாதது அன்பருக்குண்டு என்பது அன்னை செயல்படும் வழிகளில் ஒன்று.
- பலன் பெருகுவதற்கு அளவில்லை, அர்த்தமுமில்லை, பெறுபவர் மனம் பெருகும் அளவுக்குப் பெறும் பலன் தொடர்ந்து பெருகுவது அவ்வழிகளில் ஒன்று.
- கெட்ட எண்ணத்தால் கொடுத்த சிறியதை பெரியதாக்கி நல்லெண்ணத்தின் நன்றியறிதலுக்குப் பரிசளிப்பது.
- கண்மூடி கடமையைச் செய்யாமல் ஸ்தம்பித்தவர்க்கு கடமையைப் பலனால் நிறைவேற்றுவது.
- பெறுபவரால் நம்ப முடியாத நல்லதைப் பெரிதாக்கி வற்புறுத்திக் கொடுப்பதால் பெறுபவர் நம்பிக்கையை இழந்து பெற முடியாத இடத்தை நாடுவது.
- மனித வாழ்வு வளம் பெற, பொருள்களை நாடுபவனுக்கு தெய்வம், பெறாத சிறப்புகளை அவன் கேட்காமல் கொடுப்பது.
- 15 ஆண்டுகட்கு முன் திண்டுக்கல் தியான மைய ஆண்டு விழா முடிந்த பின் அன்று காலையிலிருந்து அந்த வட்டாரத்தில் கரண்ட் இல்லையென அறிந்து விழாவில் கரண்ட் இருந்த ஆச்சரியம் அனைவரையும் திகைக்க வைத்தது.

**நாமறிய வேண்டியது:**

- ***கரண்ட் இருந்தது என அறிவது உள்ளதை அறியாதது.***
- ***எவருக்கும் இல்லாததை அன்பருக்கு அன்னை வழங்கினார்.***

# பொறுக்க முடியாத பிரியம்

பிரபல பிரெஞ்சு நடிகை கணவனுடன் நாடக மேடையில் கணவனை கத்தியால் குத்தி கொலை செய்யும் காட்சியால் பிரபலம் அதிகமாகப் பெற்றார். ஒரு நாள் நடிப்பு இடறி கத்திக் குத்து உண்மையாகி கணவன் இறந்துவிட்டான். நாடகக் கம்பனி பாரிஸை விட்டு வெளியூர் போய்விட்டது. அந்நடிகையை மணக்க விரும்பிய டாக்டர் அவளைத் தேடிப் போனார். தன்னை மணக்கும்படி கேட்பதற்காக அவளை நாடி வந்துள்ளார். பாரிசில் இந்த அசம்பாவிதத்தில் குத்துப்பட்டவருக்கு சிகிச்சை செய்தவர். அதன் மூலம் நடிகையை அறிவார். வந்த வேலையைப் பற்றிப் பேசுமுன் பாரிசில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேசினார்கள். நடிகை விபரம் கூறும்பொழுது, “அது கை தவறி நடக்கவில்லை” என்றாள். டாக்டருக்குப் புரியவில்லை. ‘‘வேண்டுமென்றே குத்தினேன்’’ என்றாள் நடிகை. கேட்டவர் அதிர்ச்சியுற்றார் அவளைத் திருமணம் செய்து கொள்ள வந்த இளைஞர் இந்த டாக்டர். அவள் கூறிய விளக்கம்:

*“என் கணவரும் நானும் சேர்ந்தே நடிப்பது வழக்கம். அவருக்கு என் மீது அளவு கடந்த பிரியம். எனக்கு கணவன், திருமணம் பிடிக்காத விஷயங்கள். பிரியம் பொறுக்க முடியாத எரிச்சல் தரும். நாளுக்கு நாள் என் கணவரின் பிரியம் அதிகரித்ததை என்னால் பொறுக்க முடியவில்லை. அதற்கு முடிவு கட்ட நான் உண்மையிலேயே அவரைக் கத்தியால் குத்தி கொலை செய்தேன்”.*

Vol. III Issue 1 April 2013
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

| | |
|---|---|
| **ESSAYS ON ACCOMPLISHMENT**<br>**N.Asokan** | ரூ.150/- |

**கர்மயோகியின்**

| | |
|---|---|
| **அன்னையின் ஆன்மீகப்பரிசு** | ரூ.100/- |
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம் (பாகம் 2)** | ரூ.250/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்**<br>*தமிழாக்கம்:* **என். அசோகன்** | ரூ.100/- |
| **SATYA JYOTHI**<br>**(CONCISE TRUISMS)**<br>**N.Asokan** | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

*பாண்டியில்*
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

*சென்னையில்*
மாம்பலம் தியான மையம்,
Priams, 'Golden Wattle', கதவு எண் 36,
கோபால் தெரு, அருணா ஹோட்டல் அருகில்,
தி.நகர், சென்னை - 600 017.
✆: (044)-24347191

Vol. III Issue 1 April 2013

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## ஏப்ரல் 2013